


# 2024

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## வருடாந்த செயற்றிறன் அறிக்கை
## Annual Performance Report

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
**Department of Government Information**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024

## அரசாங்க தகவல் திணைக்களம்

இல 163,
கிருலபன மாவத்த,
கொழும்பு 05.

**2024 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

# அரசாங்க தகவல் திணைக்களம்

## செலவுத் தலைப்பு இலக்கம்: 210

*2020.01.30 ஆம் திகதிய அரச நிதித் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.*

# உள்ளடக்கம்


| முன்னுரை | பக்கம் |
|---|---|
| அத்தியாயம் 01 – நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் பொழிப்பு | 85 - 98 |
| அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு | 99 - 105 |
| அத்தியாயம் 03 – ஆண்டுக்கான முழுமையான நிதிச் செயலாற்றுகை | 107 - 129 |
| அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி | 131 - 134 |
| அத்தியாயம் 05 – நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 135 - 137 |
| அத்தியாயம் 06 – மனித வளக் கூறுகள் | 139 - 143 |
| அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை | 145 - 159 |
| முடிவு | 160 – 161 |

# 01 அத்தியாயம்

## நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் பொழிப்பு

# நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் பொழிப்பு

1.1 அறிமுகம்

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

1.3 பிரதான பணிகள்

1.4 நிறுவனக் கட்டமைப்பு குறிப்பு

1.5 திணைக்களத்தின் பிரிவுகள்/அலகுகள்

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்/நிதியம்

1.7 வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்ற திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (இருப்பின்)

அ) கருத்திட்டம்

ஆ) பங்களிக்கின்ற முகவர் நிறுவனம்

இ) கருத்திட்ட மதிப்பீட்டு செலவு - ரூ.மில்

ஈ) கருத்திட்டக் காலப்பகுதி

# 1.0 அரசாங்க தகவல் திணைக்களம்

## 1.1. அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் யுத்தம் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் பரிமாறிக் கொள்வதற்காக "War Information Centre" எனும் பெயரில் செயற்பட்டது.

உலக மகா யுத்தம் முடிவுற்றதன் பின்னர் குறித்த யுத்தம் தொடர்பான தகவல்களை வழங்கிய நிலையம் அரசாங்க அபிவிருத்தி தகவல்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் எனும் பெயரிலான நிறுவனத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக 1948 யூலை மாதம் 31 ஆம் திகதி சோல்பரி ஆணைக்குழுவின் ஆலோசனை மற்றும் விதந்துரைகளுக்கமைய கொழும்பு காலிமுகத்திடல் செயலகக் கட்டிடத்தில் முதல் தடவையாக அரசாங்க தகவல் திணைக்களம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் அரசாங்க தகவல் திணைக்களம்,

1. செய்தி வழங்கல் பிரிவு
2. அரசாங்க புத்தகங்கள் நிறுவனம் மற்றும்
3. அரசாங்க திரைப்படப் பிரிவு

ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்தது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தி பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான மூன்று பிரதான பணிகளை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு,

1. அரசின் அபிவிருத்தி தொடர்பான செய்திகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
2. அரசின் உத்தியோகபூர்வ வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்லல். (அச்சு மற்றும் விநியோகம்)
3. அரசால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக கிராமமட்ட மக்களை தெளிவூட்டுவதற்காக அரசாங்க திரைப்பட பிரிவின் மூலம் விவரணத் திரைப்படங்களைத் தயாரித்துக் காண்பித்தல். போன்றனவாகும்.

காலிமுகத்திடல் செயலக கட்டிடத்திலிருந்து நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் காலத்துக்கு காலம் ஆங்காங்கே நிறுவப்பட்டன. அவற்றில் ஜாவத்த நீர்ப்பாசன திணைக்களக் கட்டிடம், மொரட்டுவ வெலோனா கட்டிடம், கோட்டை ட்ரான்ஸ்வரக்கர் மாளிகை, ஸ்ரீமத் பாரென் ஜயத்திலக்க மாவத்தையிலுள்ள அத்தபத்து கட்டிடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1990 ஆண் ஆண்டு காலப்பகுதியில் கொள்ளுப்பிட்டி தனியார் கட்டிடத்தில் இரண்டு மாடிகளில் இயங்கிய திணைக்களம், பின்னர் அரச திரைப்பட பிரிவு இயங்கிய பொல்ஹேன்கொட வளாகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது தற்போதைய வளாகத்தில் இயங்குகின்றது.

அன்று தொடக்கம் குறித்த வளாகத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணித்து நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒரே வளாகத்துக்கு கொண்டுவருவதற்கு நிறுவன தலைவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமும், பாண்டித்தியமும் பெற்ற ஊடகவியலாளரும், பத்திரிகை ஆசிரியருமான எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல அவர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிராதன தகவல் அலுவலராக நியமிக்கப்பட்டார். அத்துடன், உதவி தகவல் அலுவலர்களாக பி.என். மெத்தேகொட, எல்.ஆர்.குணதிலக, எஸ்.பி. வெத்தசிங்க, பி.பீ. விஜேசிங்க ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

திணைக்களத்தின் ஆரம்பகால தகவல் அத்தியட்சகராக திரு. பி.நடேசன் அவர்கள் கடமையாற்றியதுடன், குறித்த தகவல் அத்தியட்சகர் பதவி 2009 ஆம் ஆண்டிலிருந்து தகவல் பணிப்பாளராகவும் பின்னர் தகவல் பணிப்பாளர் நாயகமாக நிறுவனப் பிரதானியின் பதவி தரமுயர்த்தப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் பிரபல ஊடகவியலாளர்கள், ஊடக வாண்மையாளர்கள் மற்றும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் பதவி வகித்துள்ளதுடன், 2024.10.01 தொடக்கம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான திரு. எச்.எஸ்.கே.ஜே.பண்டார அவர்கள் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் பதவியில் கடமையாற்றுகின்றார்.

நேரடியாகப் பொது மக்களுக்கு செய்திகளை வழங்கும் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் நிறுவனமாகையால் அரச நிறுவனங்களில் தகவல் திணைக்களம் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழ்கின்றது. அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல்கள் அனைத்தும் உண்மைத் தகவல்களை உள்ளடக்கியவையாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு செய்திகளை வழங்குவதுடன், காலத்திற்குக் காலம் அரசாங்கங்கள் எடுக்கின்ற தீர்மானங்களுக்கமைய செயற்படுவதற்க நேரிட்டுள்ளது. 1979, 1980, 1981, 1983, 1987, 1995, 1996 மற்றும் 2000 ஆண்டுகளில் அரசாங்கம் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், அச்சந்தர்ப்பங்களில் நாட்டில் குழப்பகரமான சூழ்நிலைகள் நிலவியமையே அதற்குக் காரணமாக அமைகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் செய்தித் தணிக்கைகளை மேற்கொள்வதற்கான தகுதிவாய்ந்த அதிகாரியாக தகவல் பணிப்பாளருக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அரசாங்க வெகுசன ஊடகக் கட்டமைப்பில் நிலவிய மட்டுப்பாடுகளை அடையாளம் கண்டு, மேலும் அபிவிருத்திப் பணிகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், குறிப்பாக அரசின் கமத்தொழில், புத்தாக்கம், ஜனநாயகத்தை பலப்படுத்துதல், சர்வஜன வாக்குரிமையில் மக்களின் பணிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் போது, அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அரச திரைப்படப் பிரிவு மிகவும் பரந்தளவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யூலியோ பெற்ரோனி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரச திரைப்படப் பிரிவு, சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட தேசிய அபிவிருத்தி பற்றி பொது மக்களை தெளிவுபடுத்துவதற்காக விவரணத் திரைப்பட தயாரிப்பு மூலம் பெரும் பணியாற்றியுள்ளது. பிற்காலத்தில் பல புகழ்பெற்ற விவரணத் திரைப்பட இயக்குநர்களை உருவாக்கிய இந்த பிரிவு, பாரிஸ் சர்வதேச திரைப்பட விழா போன்ற வெளிநாட்டு திரைப்பட விருது விழாக்கள் பலவற்றில் ஆவணமாக்கல், பகுதியளவில் ஆவணமாக்கல் பிரிவுகளில் இலங்கைக்கான விருதைப் பெற்றுள்ளது.

ஜனநாயக நாட்டில் அனைத்துப் பிரஜைகளுக்கு அரச கொள்கைகள் மற்றும் அரசால் வழங்கப்படுகின்ற சேவைகள், சட்டங்கள் ஒழுங்குவிதிகள் தொடர்பான தகவல்களை முறைசார்ந்த வகையிலும் நம்பகமான சட்டபூர்வமான வெளியீடுகள் மூலம் தெளிவுபடுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் திணைக்களத்தால் வெளியிடப்படாத அரச வெளியீடுகளை விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற அரச வெளியீட்டுப் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அரச வெளியீட்டு பணியகமும் மிகவும் பரந்த குறிக்கோளுடன் இயங்கி அரசாங்கத்தின் சட்டங்கள் தொடர்பான உத்தியோகபூர்வ வெளியீடுகளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அச்சிட்டு வெளியிட்டு வருகிறது. அதன் ஆரம்ப அலுவலராக திரு.R.V.H.Vantwest அவர்கள் பணியாற்றியுள்ளார்.

ஆரம்ப காலம் தொடக்கம் அரச பிரச்சார செயற்திட்டத்தை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நிறைவேற்றிய அரசாங்க தகவல் திணைக்களம், இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களை இலக்காக கொண்டு துண்டுப்பிரசுரங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த காலப்பகுதியில் வெளிநாட்டுத் தூதரகங்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்ட "Week Happening in the Island" சஞ்சிகை, "Introduction Ceylon" போன்ற வெளியீடுகள் மூலம் இலங்கை தொடர்பான விசேட தகவல்கள் வெளிநாடுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக "Sri Lanka Today" எனும் பெயரிலான மும்மாத சஞ்சிகை வெளியிடப்பட்டது.

அரச திரைப்பட வெளியீட்டுப் பிரிவு இலங்கையின் சமூகக் கலாச்சார மற்றும பொருளாதார நிலைமைகளை செவிப்புல கட்புல ஊடகங்கள் வாயிலாக மீளுருவாக்கத்திற்கான முன்னோடி நிறுவனமாகும். குறிப்பாக விவரண நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு மற்றும் செய்திக் காணொளிகள் மூலம் 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நாட்டில் இடம்பெற்ற சமூக அரசியல் கலாச்சார நிகழ்வுகளை செவிப்புல கட்புல ஊடகங்கள் வாயிலாக மீளுருவாக்கம் செய்து எதிர்காலத் தேவைகளுக்காகப் பாதுகாக்கின்ற ஒரேயொரு நிறுவனமாகும். ஆரம்ப காலத்தில் திரைப்படத்தை ஊடகமாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளதும், தற்போது நவீன தொழிநுட்பங்களுடன் தொடர்புடைய டிஜிட்டல் காணொளி ஊடகங்கள் வாயிலான விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்தியாக்கங்கள் உள்ளிட்ட செவிப்புல கட்புல நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கின்ற நிறுவனமாகும்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அடையாளமாக அமைந்த அகிலத்தின் உள்ளங்கை நெல்லிக்கனியாக மாற்றிய “தெசத்திய” சஞ்சிகை, அதன் கன்னி இதழ் 1978 ஆம் ஆண்டு மாசி மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் ஐந்து தசாப்தங்களாக தீர்மானம்மிக்க மையப்புள்ளிகளைக் கடந்து தொடர்ச்சியாக மக்களுக்கு கருத்துக்களால் ஊட்டமளிக்கப்பட்டனர். இலங்கை சமூகத்தை தொடர்பாடல் துறையில் திருப்புமுனையாக அமைகின்ற குறித்த தெசத்திய சஞ்சிகை மூலம் ஊட்டமளிக்கப்பட்ட எழுத்தாளர்கள் ஊட்டம் பெற்றார்கள். பெருமளவு வாசகர் தலைமுறைகளும் உள்ளனர். எமது நாட்டின் கொள்கை வகுப்புக்களை மேற்கொள்வோர் தொடக்கம் விவசாயிகள், தொழிலாளிகள் வரை அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்து இலங்கை அரச துறையால் வெளியிடப்பட்ட ஒரேயொரு தகவல் சஞ்சிகையாகவும் “தெசத்திய” அமைந்தது. குறிப்பாக அரசின் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் முதன்மைப் பொறுப்பை தோளில் சுமந்த தெசத்திய சஞ்சிகை அதனைக் கடந்து சென்று மக்களின் புலமைசார் புரட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கொண்டது. சமூக, பொருளாதார, கலாச்சார, கலை, சர்வதேச மற்றும் பல துறைகள் தொடர்பான தகவல்களை மிகவும் எளிமையான மொழிநடையில் வாசகர்களின் இரசனையை அதிகரிக்கும் வகையில் முன்வைப்பதில் தெசத்திய வெற்றி பெற்றது.

1993 ஆண்டில் அரசுசாரா தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் தடவையாக செய்திகளை ஒளிபரப்புவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியமை எமது நாட்டின் ஊடக வரலாற்றில் முக்கிய சம்பவமாக கருதலாம். அதற்கு இணையாக பொது மக்களுக்கு தேவையான தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக 1995 மே 18 ஆம் திகதி தேசிய தகவல் நிலையத்தை உருவாக்கியமையும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலுமொரு முற்போக்கான நடவடிக்கையாக அமைந்தது. அரசாங்க தகவல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஊடக உள்ளடக்கங்களையும் ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் அதுதொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் பரப்புரை அலகு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல்கள், அரச அபிவிருத்திச் செயன்முறை பற்றி பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் அறிவித்தல்கள்களை ஊடக நிறுவனங்களுக்கு வழங்கல், அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்புச் செய்தல், ஊடக சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தல், தேசிய மற்றும் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்களின் ஊடக ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், வெளிநாட்டு இராஜதந்திரிகளின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயங்களின் போதான ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், Guide to Media மற்றும் Guide to Ministry தொலைபேசி தொடர்பு இலக்கங்கள் உள்ளடங்கிய பட்டியலைத் தயாரித்தல், ஊடகப் பயற்சிப்பட்டறைகள் மற்று கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தல், காலத்தின் தேவைகளுக்கமைய ஊடகவியலாளர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், ஜனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் விசேட அறிக்கையைத் தயாரித்தல் போன்றவற்றை மேற்கொள்ளல்.

1948 ஆண்டு சுதந்திரம் பெற்றவுடன் உருவாக்கப்பட்ட திணைக்கள மாதிரிக்கமைய பயணிக்கக்கூடிய உச்சம் வரை பயணிக்கும், தனது பயணப் பாதையில் அன்றைய நாளை விடவும் பிந்திய ஆண்டுகளில் நவீன உலகத்துக்கு பொருத்தமான வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம் 2024 ஆம் ஆண்டளவில் பல பிரிவுகளில் தனது சேவைகளை மேற்கொண்டு வருகிறது. அரச திரைப்பட பிரிவு, நிழற்பட பிரிவு, அரச சமூக ஊடகப் பிரிவு, தெசத்திய சஞ்சிகை பிரிவு, புதிய ஊடகப் அலகு (www.news.lk), அரச வெளியீட்டுப் பிரிவு, ஊடக அடையாள அட்டைப் பிரிவு, பிரச்சார பிரிவு, ஊடக நுண்ணாய்வு மற்றும் வெகுச ஊடக ஆய்வுப் பிரிவு, வெளிநாட்டு செய்தி அலகு, பாடசாலை ஊடகக் கழகங்கள் அபிவிருத்தி அலகு ஆகியவற்றை உள்ளடக்கி அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

இப்பணிகள் சமகால மாற்றங்களுக்குட்பட்டு தற்போது வரை வெற்றிகரமாக செயற்படுவதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் இயங்கி வருவதுடன், தற்போதுள்ள பொறிமுறை மூலம் அதற்கான அவகாசமும் கிடைத்துள்ளதும் அவதானிப்பின் போது தெளிவாகிறது.

### ❖ அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் தலைவர்கள்

1948 ஆண்டிலிருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் பிரதானிகளாக தகவல் அத்தியட்சகர், தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் ஆகிய பெயர்களில் பதவி வகித்து பின்வரும் அலுவலர்கள் செயற்பட்டுள்ளார்கள்.

1948 - திரு. பி. நடேசன்

1949 - திரு. டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1950 - ரி.ரி.ஆர். விவியன் ஹொரயின்

1952 - டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1955 - திரு. நடேசன் பரராஜசிங்கம்

1956 - திரு. லயனல் பெரேரா

1957 - திரு. ஜீ.டப்.ஏ.எம். பெரேரா

1958 - திரு. ஜேம்ஸ் பெரேரா

1959 - திரு. ரி.எம். ஜயரத்தினம்

1960 - திரு. திலக் எரங்க குணரத்ன

1961 - திரு. டப்.எல் பெர்ணான்டோ

1962 - திரு. எஸ்.பி. சேனநாயக்க

1966 - திரு. டி. அலுவிஹாரே

1967 - திரு. பி.என். மெத்தெஹொட

1968 - கலாநிதி. எஸ்.எல்.பி. அமுணுகம

1972 - திரு. பி.எம். பிரேமவர்த்தன

1974 - திரு. டப்.ஆர்.ஜீ. திலகரத்ன

1977 - எஸ். அனுர குணசேகர

1983 - திருமதி. மானெல் அபேரத்ன

1990 - திரு. கே.எஸ். விமலசேன

1991 - திரு. கே.ஆர். எல். விஜேவர்த்தன

1992 - பேராசிரியர். சுனந்த மத்தும பண்டார

1994 - திரு. ஆரிய ரூபசிங்ஹ

2003 - திரு. கே.ஏ.பீ.ஜே.பி. ஜயசேகர

2004 - திரு. டப்.எம். பியசேன

2005 - திருமதி. காந்தி விஜேதுங்க

திரு. எஸ்.டீ. பியதாஸ

2006 - ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

### ❖ தகவல் பணிப்பாளர் நாயகம் பதவியில்

2009.02.01 தொடக்கம் 2010.05.06 வரை – திரு. ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

2010.05.07 தொடக்கம் 2015.01.08 வரை – பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல

2015.01.13 தொடக்கம் 2015.05.07 (பதில்) – திருமதி. கே.டப்.ரி.என். அமரதுங்க

2015.05.08 தொடக்கம் 2017.06.02 வரை – கலாநிதி. தர்ஷனி குணதிலக்க

2016.06.06 தொடக்கம் 2017.09.29 வரை – கலாநிதி. ரங்க கலன்சூரிய

2017.10.13 தொடக்கம் 2018.10.26 வரை – சட்டத்தரணி. சுதர்ஷன குணவர்த்தன

2018.10.27 தொடக்கம் 2021.04.07 வரை – திரு. நாலக்க களுவெவ

2021.04.19 தொடக்கம் 2022.09.07 வரை – திரு. மொஹான் சமரநாயக்க

2022.09.08 தொடக்கம் 2024.09.30 வரை – திரு. தினித் சிந்தக கருணாரத்ன

2024.10.01 தொடக்கம் இதுவரை – திரு. எச்.எஸ்.கே.ஜே. பண்டார

## 1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

### ❖ தூரநோக்கு

“பொறுப்புமிக்கதும் சுயாதீனதுமான ஊடக கலாசாரத்தினைப் பேணுதல்”

### ❖ பணிக்கூற்று

“இலங்கையிலுள்ள ஊடக சுற்றுச்சூழலில் பரஸ்பரம் மிக்க தொடர்பாடலை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல். அரசாங்கத்தின் தூரநோக்கை செயற்படுத்தல் சரியான தகவல்களை வழங்குதல் பொதுமக்களின் உரிமைகளை தீர்மானிப்பதற்கான தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குதல்”

### ❖ நோக்கங்கள்

- தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அரச கொள்கைகள், திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி செயன்முறைகள் தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்துதல்.
- உயரிய ஊடக கலாசாரத்தை உருவாக்குதல்.
- முக்கியமான சமகால சம்பவங்கள், அரச தகவல்கள் மற்றும் செயற்பாடுகள், செவிப்புல – கட்புல மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தி சமூகமயப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.
- வெகுசன ஊடகத்துறைக்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துதல்.
- வெகுசன ஊடகத்துறைக்கு மற்றும் ஊடகவிலாளர்களுக்கான பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களது நலன்களுக்காக முன்னின்று செயற்படுதல்.

## 1.3. பிரதான செயற்பாடுகள்

உயரிய அபிவிருத்தி மட்டம் மற்றும் நிலைபேறான இலக்குகளை அடைவதற்காக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களைப் பங்கேற்கச் செய்து தொடர்பூட்டுவதற்கு ஒத்துழைக்கின்ற திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களாக அமைவது,

- அமைச்சின் தகவல்களை வெகுசன ஊடகங்களுக்கு வெளியிடல்
- அரச அபிவிருத்திச் செயன்முறைகள் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டல்
- தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் மற்றும் அவசர நிலைமைகள் தொடர்பாக தெளிவூட்டல்.
- அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக திரைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகள் மூலம் மக்களைத் தெளிவூட்டல்
- அரசின் அபிவிருத்தி தொடர்பான தகவல்கள், வரலாற்றுத் தகவல்கள் மற்றும் ஏனைய காலத்திற்கேற்ப முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள் தொடர்பான செய்திகள் மற்றும் விவரணக் காணொளிகள் திரைப்படங்கள் தயாரித்தல்
- ஆய்வு ரீதியான விவரணத் திரைப்படங்களைத் தயாரித்தல்
- வெளிவிவகார அமைச்சின் ஊடாக உள்நாட்டு தகவல்களை வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டுத் தகவல்களை எமது நாட்டு மக்களுக்கும் வழங்கல்.
- அரச சமூக ஊடக அலகின் மூலம் News.lk இணையத்தளத்தை மும்மொழிகளிலும் பேணிச் செல்லல்.
- தெசத்திய சஞ்சிகை, அரச நிருபங்கள் மற்றும் நுண்ணாய்வு சஞ்சிகைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.
- அரச வெளியீட்டுப் பணியகத்தை வினைத்திறனுடன் பேணிச் செல்லல். (07 மாவட்ட வெளியீட்டுக் கருமபீடங்கள் உள்ளடங்கலாக)
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் தேசிய நடவடிக்கைகள் மற்றும் இராஜதந்திர வைபவங்களுக்கான ஒருங்கிணைப்புக்கள்
- பிராந்திய அபிவிருத்திப் பணிகள் மற்றும் அமைச்சுக்களின் புதிய வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல் மற்றும் ஊடகக் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல்
- தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்களில் பிரதான ஊடக இணைப்பாளராக செயலாற்றுதல்
- தொழில்வாண்மை ரீதியான பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை வழங்குதல்
- நிரல் அமைச்சின் ஊடக அலகுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புக்களை பேணிச் செல்லல்.

- தேசிய ரீதியாகவும் சமகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான சம்பவங்களுக்குரிய நூல்களை வெளியிடல் (ADB மற்றும் UNDP போன்ற நிறுவனங்களுடன் இணைந்து தேவையாள நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.)
- ஜனாதிபதி அவர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்களின் போது ஊடக அறிக்கைப்படுத்தல்களை அச்சு, கட்புல மற்றும் செவிப்புல அறிக்கைகளாக திரட்டுதல்
- நாளாந்தம் மும்மொழிகளில் வெளியிடப்படும் பத்திரிகை செய்திகளை பகுப்பாய்வு செய்து ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்தல்.

# அரசாங்க தகவல் திணைக்களம் நிறுவனக் கட்டமைப்பு



## 1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்/அலகுகள்

01. நிர்வாகப் பிரிவு
02. கணக்குப் பிரிவு
03. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
04. தயாரிப்பு பிரிவு
05. தொகுப்புப் பிரிவு
06. நேரலைக்கூட பிரிவு
07. ஒலி மற்றும் கேட்போர்கூடப் பிரிவு
08. வீடியோ புகைப்பட மற்றும் ஒளியலங்காரப் பிரிவு
09. டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுகூடப் பிரிவு
10. திரைப்படப் பாதுகாப்புப் பிரிவு
11. புகைப்படப் பிரிவு
12. பிரச்சாரப் பிரிவு
13. இணையத்தளம் மற்றும் ஊடக சமூக அலகு
14. தெசத்திய மற்றும் வெளியீட்டுப் பிரிவு
15. மாவட்ட ஊடக அலகு ஒருங்கிணைப்புப் பிரிவு
16. ஊடக அடையாள அட்டை பிரிவு
17. டிஜிட்டல் மற்றும் தகவல் தொழிநுட்ப அலகு
18. அரசாங்க வெளியீட்டுப் பணியகம்
19. வெகுசன ஊடக ஆய்வுப் பிரிவு
20. ஊடக புலனாய்வுப் பிரிவு
21. வெளிநாட்டுச் செய்திகள் பிரிவு
22. பாடசாலை ஊடகக் கழகங்கள் மேம்பாட்டுப் பிரிவு
23. நூலகப் பிரிவு
24. போக்குவரத்துப் பிரிவு
25. மொழிபெயர்ப்புப் பிரிவு
26. பராமரிப்பு அலகு
27. களஞ்சியம்

## 1.6. திணைக்களத்திக் கீழுள்ள நிறுவனங்கள்

- மாவட்ட ஊடக பிரிவு

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் மாவட்ட ஊடகப் பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

## 1.7. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்ற கருத்திட்டங்களின் தகவல்கள்

அரசாங்க தகவல் திணைக்களததின் வெளிநாட்டு உதவி கிடைக்கும் திட்டங்கள் எதுவுமில்லை.

# 02 அத்தியாயம்

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

### ❖ முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

எப்போதும் புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி அரசின் உத்தியோகபூர்வ தொடர்பாடலில் முன்னணியாகத் திகழ்வதே அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொலைநோக்காகும்.

நவீன தொழிநுட்பத்துடன் சமகாலத்தில் நாளாந்த செயற்பாடுகள் வழக்கமான பணிகளையும் தாண்டிய டிஜிற்றல் தொழிநுட்பத்துடன் அனைத்துப் பணிகளையும் டிஜிற்றல் மயமாக்கலுக்கு (Digitalization) உட்பட்டு பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்ளும் டிஜிற்றல் தளத்தில் அரசாங்க தகவல் திணைக்களம் முன்னோக்கி அடியெடுத்து வைத்துள்ளது.

அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்புடன் செய்தி/தகவல்களின் மூலமாக அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன், அரசாங்கத்தின் அனைத்து சமகாலத் தகவல்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை அரச, தனியார் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்குவதற்கான அரச பொறிமுறையாக செயலாற்றுகின்றது.

அத்துடன் தற்போது டிஜிற்றல் தளத்தில் மக்களுக்கு நம்பகமான தகவல்களை தொடர்பூட்டுவதில் டிஜிட்டல் தளத்தை இவ்வருடம் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு இயலுமை கிட்டியமை அரசாங்க தகவல் திணைக்களத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

திணைக்களத்தின் கீழுள்ள இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளில் துரிதமாக தகவல் தொடர்பாடலை மேற்கொள்கின்ற வலையமைப்புக்களாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ❖ டிஜிற்றல்மயமாக்கலின் சிறப்பான சந்தர்ப்பங்கள்

சமூக ஊடக வலையமைப்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொய்யான தகவல்கள் காணப்படுவதால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு கிடைக்கும் தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல் கட்டாயமானதாகும். அரசாங்க தகவல் திணைக்களம் www.dgi.gov.lk, “Department of Government Information YouTube” அலைவரிசை மற்றும் Face Book மற்றும் www.newslk இணைய தளம், YouTube அலைவரிசை மற்றும் Face Book பக்கம், X Crop (Twitter) ஆகிய அனைத்து வலையமைப்புகள் ஊடாக நம்பகமான தகவல்கள் நேரடியாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

| ஊடகங்களுக்கு வசதிகளை வழங்குதல் | | |
|---|---|---|
| | **நிகழ்ச்சித்திட்டங்கள்** | **அமுல்படுத்துதல்** |
| 01 | ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக cloud தளத்தை பயன்படுத்தல். | அரசாங்க தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் மூலமாக வழக்கமான முறைக்கு அப்பால், ஒளி நாடாக்கள், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள், செய்தி அறிக்கைகள் அனைத்தும் சகல ஊடகங்களுக்கும் ஒரே தடவையில் துரிதமாக வழங்கப்படுகின்றது. |
| 02 | திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடக உள்ளடக்கங்களையும் ஊடகங்களுக்கு துரிதமாக வழங்குதல். | அரசால் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக அனைத்து அறிவித்தல்கள் அடங்கிய ஒளி நாடாக்கய், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள் போன்ற அனைத்தையும் ஊடகங்களுக்கு வெளியிடுதல்.<br>முன்னர் அதற்காக முறையான பொறிமுறையொன்று இருக்காததுடன், தற்போது சிறப்பான ஒருங்கிணைப்பில் அனைத்து ஊடக நிறுவனங்களையும் பங்குபற்றச் செய்வதற்கு இயலுமை கிட்டியுள்ளது. |
| 03 | Bulk E mail System மின்னஞ்சல் முறைமையை உருவாக்குதல். | அச்சு, இலத்திரனியல், இணைய ஊடகங்கள், நவீன ஊடகங்கள், வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் 200 வரையான மின்னஞ்சல் முறைமை மூலம் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. |
| 04 | அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஊடக அடையாள அட்டை வழங்குதல் | கோவைகளை அடிப்படையாகக் கொண்டு ஊடக அடையாள அட்டை வழங்கியமைக்குப் பதிலாக தரவுத் தொகுதியைப் (Data Base) பயன்படுத்தி அவற்றை வழங்குவதற்கு இயலுமை கிட்டியுள்ளது. |

| மக்களுக்கு நேரடியாக தகவல்களை வழங்குதல் | | |
|---|---|---|
| | "Department of Government Information" YouTube ஒளிபரப்பை நடாத்திச் செல்லல். | Department of Government Information You Tube அலைவரிசை 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் நேயர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. அதன்போது பல தொனிப்பொருட்களில் காணொளிகள் தயாரிக்கப்பட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, INFO News, INFO Highlights, உள்ளக (Inside), INFO News Parliament Highlights, Provincial Highlights, Taller, Documentary, Short video Reel போன்றவையாகும். அதற்கமைய, YouTube அலைவரிசையில் கிட்டத்தட்ட 6000 காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு – வெளிநாட்டு மக்கள் இவ் YouTube அலைவரிசையுடன் இணைந்திருந்ததுடன், YouTube காணொளிகளைப் பார்வையிட்ட தடவைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனைக் கடந்து உயரிய மக்கள் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. |
| | "Department of Government Information" Facebook பக்கத்தை இயக்குதல். | தற்போது திணைக்களத்தின் facebook பக்கத்தில் 200,000 பேர் (Followers) இணைந்துள்ளனர். அதற்கமைய, facebook பார்வையிடும் தடவைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனைக் கடந்துள்ளது. அத்துடன், உள்ளடக்கத்தை முறையாகப் பதிவேற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து facebook likes, people reached, engage எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டியுள்ளது. சமகால மற்றும் அபிவிருத்தி பற்றிய செய்திகள் அடங்கிய காணொளிகள் (You Tube அலைவரிசையின் அனைத்து காணொளிகள்) ஆக்கபூர்வமான post மற்றும் நிழற்படப் பொழிப்புக்கள் காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தப்படுகிறது. தற்போது ஒரு வாரத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான reached எண்ணிக்கையை பேணும் ஆற்றல் கிடைத்துள்ளது. |

| | | |
|---|---|---|
| | www.news.lk web இணையத்தளம் | சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள் அனைத்தும் இவ் இணையதளத்தின் ஊடாக இற்றைப்படுத்தி மும்மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன், 24 மணித்தியாலமும் இற்றைப்படுத்தப்படும் அரச உத்தியோகபூர்வ இணையத் தளமாகும். இவ் இணையதளத்தின் கீழ் Face book பக்கம், You Tube அலைவரிசை, X Crop. twitter பக்கமும் இயங்குகிறது.<br>அத்துடன், அமைச்சரவை ஊடக சந்திப்பு உள்ளிட்ட விசேட ஊடக சந்திப்புகளின் நேரலை ஒளிபரப்பும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு சிறந்த பதிலளிப்புக்களும் கிடைத்து வருகின்றன. |
| | தெசத்திய சஞ்சிகை | மக்களுக்கு சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள், வெளிநாட்டு செய்திகளை உள்ளடக்கிய 44 ஆண்டுகால வரலாற்றை கொண்டுள்ள தகவல் வழங்கும் சஞ்சிகையை உரிய வகையிலும், 2024 ஆம் ஆண்டில் மிகவும் உயர்தரத்துடனும் வடிவமைப்புடனும் பன்னிரண்டு (12) தெசத்திய சஞ்சிகைகள் அச்சிடப்பட்டுள்ளன. |
| **ஊடகப் பாதுகாப்புக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்** | | |
| | டிஜிற்றல் பாதுகாப்பு முறைமையை நிறுவுதல். | திணைக்களத்திடமுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படங்கள், காணொளிகள், நிழற்படங்கள் போன்றவற்றை டிஜிற்றல் தொழிநுட்பத்துக்கு மாற்றுகின்ற (Convert To Digital) வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>தற்போது 467 பழைய திரைப்படங்கள் டிஜிற்றல் தொழிநுட்பத்துக்கு convert செய்யப்பட்டு, பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>மேலும், டிஜிற்றல் பாதுகாப்பு முறைமையை உருவாக்குதல் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதன்மையான பணியாக அமைவதுடன், அதன் விசேடமான வீடியோ நாடாக்கள், நிழற்படங்களைப் பாதுகாத்தல் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பணிகளாக இவ்வாண்டில் அமைந்துள்ளது. |

- ## ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் வசதிகளை முறையாக விரிவாக்குதல்

ஆரோக்கியமான சமூக நல்லிருப்புக்காக நம்பகத்தன்மையுடன் உண்மைத் தகவல்களை அறிக்கையிடுவதற்காக ஊடக நிறுவனங்கள் தகவல்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். அரசின் அபிவிருத்தி மற்றும் சமகால தகவல்கள் முறையான பொறிமுறையின் கீழ் ஊடகங்களுக்கு தொடர்பாடல் செய்வதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய Cloud தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஊடக நிறுவனங்களுக்கு வீடியோ நாடாக்கள், நிழற்படங்கள், ஊடக அறிவித்தல்கள் போன்றவற்றை துரிதமாக வழங்குவதற்கான முறையான பொறிமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ## விசேட வெற்றிகள்

8. “சின்குவா” செய்தி நிறுவனம் (Xinhua News Agency) மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டமை.
9. அநுராதபுர மாவட்ட ஊடகப் பிரிவால் தயாரிக்கப்பட்ட “மானாவ மலைத்தொடர்” பற்றிய விவரண நிகழ்ச்சித் தொகுப்பு வடமத்திய மாகாண கலை விழாவில் சிறந்த தயாரிப்பு, திரைக்கதை, வீடியோப்பதிவு விருதுகளை வென்றெடுத்தது.
10. 2025 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் பெறுபேறுகள் நேரலை ஒளிபரப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அதற்காக, DGI You Tube பக்கத்தில் 73,000 பேர் பார்வையிட்டனர் மற்றும் Event TV மூலம் 5000 பார்வையாளர்கள் நேரடியாக இணைந்திருந்தனர்.
11. தெசத்திய சஞ்சிகை E-Magazine ஆக வெளியிடப்பட்டமை.
12. கொரியாவின் “KOICA Invitational Fellowship Training Programme” வெளிநாட்டு பாடநெறியின்03 கட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தமை.
13. அச்சு, இலத்திரனியல், இணையத்தளம், புதிய ஊடகம், வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் நேரடியாக தகவல்களை வழங்குவதற்காக மின்னஞ்சல் முறைமையொன்று உருவாக்கப்பட்டமை.

## ❖ எதிர்கால இலக்குகள்

I. நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் வினைத்திறனாக சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகல்களை விரிவாக்கம் செய்தல்

II. அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல்.

III. திணைக்கள அலுவலர்களை அறிவாலும் அனுபவத்தாலும் மேம்படுத்தல்

IV. ஊடக அறிவை விருத்தி செய்தல்

V. பாடசாலை மட்டத்தில் ஊடகக் கல்வியை விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

VI. ஊடகப் பகுப்பாய்வு அறிக்கைகளைப் பயன்படுத்துகின்ற அரச அலுவலர்களின் திருப்தியை அதிகரித்தல்

VII. பாதுகாப்பான ஊடகப் பாவனையை பயனர்களுக்கு திருப்தியை அதிகரித்தல்

**தினித் சிந்தக்க கருணாரத்ன**

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்/கணக்கெடுப்பு உத்தியோகத்தர்

# 03 அத்தியாயம்

## 2024 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதி செயலாற்றுகை

## 2024 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை

## 3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ - எப்

**2024 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை கூற்று**

| வரவுசெலவு திட்டம் 2024 | | பதிவு | 2024 ரூ. | உண்மை<br>மீண்டும் இணைக்கப்பட்ட<br>2023 ரூ. | |
|---|---|---|---|---|---|
| - | **கிடைக்கப்பெற்ற வருமானங்கள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்நாட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகங்கள் மீதான வரி | 3 | - | - | ஏசீஏ -1 |
| - | வரி அல்லாத வருமானங்கள் மற்றும் பிற | 4 | - | - | |
| - | **மொத்த வருமான கிடைப்பனவு (அ)** | | - | - | |
| - | வருமானம் அல்லாத கிடைப்பனவு | | | | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 340,319,000 | 311,417,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புகள் | | 5,148,436 | 4,909,612 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்கு | | 12,704,762 | 16,318,794 | ஏசீஏ -5 |
| - | பிற பிரதான பேரேட்டுக் கிடைப்பனவுகள் | | - | - | |
| - | **மொத்த வருமானமல்லாத கிடைப்பனவுகள் (ஆ)** | | **358,172,198** | **332,645,406** | |
| - | மொத்த வருமான பெறுகை மற்றும் மொத்த வருமானமற்ற பெறுகை இ = (அ) + (ஆ) | | **358,178,198** | **332,645,406** | |
| | திறைசேரிக்கு பணஅனுப்பல் (இ) | | 280 | 4,061 | |
| | நிகர வருமான கிடைப்பனவு மற்றும் வருமானமல்லாத கிடைப்பனவு (ஈ) = (ஆ) – (இ) | | **358,171,918** | **332,641,345** | |
| | கழிவிடப்பட்ட : செலவுகள் | | | | |
| - | மீண்டெழும் செலவுகள் | | - | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 211,771,000 | சம்பளம், வேதனங்கள் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள் | 5 | 189,321,489 | 186,883,460 | |
| 137,402,735 | பிற பண்டங்கள் மற்றும் சேவைகள் | 6 | 115,880,417 | 110,2001008 | ஏசீஏ - 2(ii) |
| 1,650,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 832,395 | 1,054,041 | |
| - | வட்டி செலுத்துதல் | 8 | - | - | |
| 56,265 | பிற மீண்டெழும் செலவுகள் | 9 | 56,265 | - | |
| 350,880,000 | **மொத்த மீண்டெழும் செலவு (இ)** | | **306,090,566** | **298,137,509** | |
| | **மூலதனச் செலவு** | | | | |
| 65,500,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 10 | 18,883,440 | 13,681,599 | |
| 116,800,000 | மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 11 | 33,051,222 | 19,624,114 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ - 2(ii) |
| - | நிதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 13 | - | - | |
| 1,000,000 | ஆற்றல் விருத்தி | 14 | 596,500 | 596,150 | |
| - | பிற மூலதன செலவுகள் | 15 | - | - | |
| **183,300,000** | **மொத்த மூலதனச் செலவு (ஈ)** | | **52,531,162** | **33,901,863** | |
| - | வைப்பு செலுத்துதல் | | 5,093,111 | 12,452,926 | ஏசீஏ -4 |
| - | முற்பணம் செலுத்துதல் | | 13,419,042 | 14,878,378 | ஏசீஏ -5 |
| - | பிற பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்துதல் | | - | - | |
| - | பிரதான பேரேட்டு செலவு (எ) | | 18,512,152 | 27,331,304 | |
| - | மொத்தச் செலவு ஊ = (இ + ஈ- உ) | | 377,133,880 | 359,370,676 | |
| - | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி எ = (இ - ஊ) | | (18,961,962) | (26,729,331) | |
| | | | (18,961,962) | (26,729,331) | ஏசீஏ -7 |
| | கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கமைய மீதி | | - | - | ஏசீஏ -3 |
| | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி மீதி | | (18,961,962) | (26,729,331) | |

## 2 நிதி நிலை தொடர்பான கூற்று

ஏசீஏ - பீ

### 2024 டிசம்பர் 31 திகதியில் நிதி நிலை தொடர்பான கூற்று

| | | உண்மை | |
|---|---|---|---|
| | பதிவு | 2024 (ரூ.) | 2023 (ரூ.) |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | ஏசீஏ-6 | 1,942,025,318 | 1,942,927.346 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்கு | ஏசீஏ -5/5(ஔ) | 37,554,534 | 36,840,254 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ -3 | - | - |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,979,579,851** | **1,979,767,600** |
| **தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு** | | | |
| திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் | | 37,231,097 | 36,572,142 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண இருப்பு | | 1,942,025,318 | 1,942,927,346 |
| வாடகை மற்றும் வேலை முற்பண இருப்பு | ஏசீஏ -5(பீ) | - | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ -4 | 323,437 | 268,112 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ -3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,979,579,851** | **1,979,767,600** |

07 பக்கம் தொடக்கம் 49 ஆம் பக்கம் வரையான ஏசிஏ 1 தொடக்கம் ஏசிஏ 7 வரை மாதிரிப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல்கள் மற்றும் பதிவு பக்க இலக்கம் 50 தொடக்கம் 65 வரையான கணக்குப் பதிவு விபரங்களும், இவ் இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கும்

பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்று தயாரித்தல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இங்கு நிதிக் கூற்றுகளின் பதிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த இறுதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், ஏற்புடைய கணக்கு பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு தகவல்கள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டள்ளது எனவும், அவை அத்தொகைகளுடன் இணங்குகின்றன எனவும் இத்தால் உறுதி செய்கிறோம்.

நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிக்கைப்படுத்துகின்ற நிறுவனத்தில் காணப்படுவதால், நிதிக் கட்டுப்பாட்டுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை கண்காணிப்பதற்கும், அதற்கமைய, குறித்த முறைமையை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வகையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுவதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| பிரதம கணக்கீட்டு அலுவலர் | கணக்கீட்டு அலுவலர் | பிரதம கணக்காளர் |
| பெயர் : வீ.பி.கே.அனூஸ பெல்பிட்ட<br>பதவி : செயலாளர்,<br>வெகுசன ஊடக அமைச்சு | தினித் கருாரத்ன<br>அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் | கே.ஏ.டீ.டீ.ஏ.குமாரபேலி<br>பிரதம கணக்காளர் |
| திகதி : 2025.02.25 | 2025.02.21 | 2025.02.19 |
| Dr. Anil Jasinghe<br>Secretary<br>Ministry of Health & Mass Media<br>"Suwasiripaya"<br>385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,<br>Colombo 10 | H.S.K.J. Bandara<br>Director General of Government Information<br>Department of Government Information<br>Colombo 05 | D. Niluka Ramanayaka<br>Chief Accountant<br>Department of Government Information<br>Colombo 05 |

## 3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீஏ – சீ

### 2024 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
| <u>**தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல்**</u> | | - |
| மொத்த வரிக் கிடைப்பனவு | - | - |
| கட்டணம், மிகைக் கட்டணம், அபராதம் மற்றும் உரிம இலாபம் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத கிடைப்பனவுகள் | - | - |
| பிற வருமானத் தலைப்புகளில் சேர்க்கப்பட்ட வருமானம் | 14,833,035 | 25,702,000 |
| கட்டுநிதக் கிடைப்பனவுகள் | 340,319,000 | 311,417,000 |
| முற்பண அறவிடல் | 10,809,221 | 13,975,050 |
| வைப்புக்களால் கிடைப்பனவு | 5,148,436 | 4,909,612 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல் (அ)** | **371,109,692** | **356,003,662** |
| <u>**கழிவிடப்பட்ட – நிதிச் செலவுகள்**</u> | | |
| தனிநபர் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் | 298,767,896 | 291,904,206 |
| மானியங்கள் மற்றும் மாற்றுதல் செலவுகள் | 832,395 | 1,054,041 |
| பிற செலவுத் தலைப்புகளுக்காக செய்யப்பட்ட செலவுகள் | 3,429,153 | 3,975,161 |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி | 280 | 4,061 |
| முற்பண செலுத்தல் | 13,217,891 | 14,486,385 |
| வைப்பு செலுத்தல் | 5,093,111 | 12,452,926 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவான காசுப்பாய்ச்சல் (ஆ)** | **321,340,726** | **323,876,781** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் இ = (அ) – (ஆ)** | **49,768,967** | **32,126,881** |

| | | |
|---|---|---|
| <u>முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்குலாபம் | - | - |
| உரித்து நீக்கும் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை | - | - |
| உப கடன்களை அறவிடுதல் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (இ)** | **-** | **-** |
| **<u>கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :</u>** | | |
| மூலதன செலவுகள் | 49,768,967 | 32,126,881 |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஈ)** | **49,768,967** | **32,126,881** |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)** | **(49,768,967)** | **(32,126,881)** |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)** | **(0)** | **(0)** |
| <u>நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவான காசுப்பாய்ச்சல்</u> | | |
| உள்நாட்டு கடன் பெறுதல் | - | - |
| வெளிநாட்டு கடன் பெறுதல் | - | - |
| கொடைகள் கிடைத்தல் | - | - |
| **நிதிச் செயற்பாடுகள் உருவான மொத்த காசுப்பாய்ச்சல் (எ)** | **-** | **-** |
| **<u>கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :</u>** | | |
| உள்நாட்டு கடன் மீளச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன் மீளச் செலுத்துதல் | - | - |
| **நிதி செயற்பாடுகளுக்கு செலவான மொத்த காசுப்பாய்ச்சல் (ஏ)** | **-** | **-** |
| **நிதி செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (ஓ) = (ஊ) + (ஏ)** | **-** | **-** |
| **நிதியில்தேறிய மாற்றங்கள் (ஓ) = (ஊ) + (ஏ)** | **-** | **-** |
| ஜனவரி 01 திகதியில் ஆரம்ப காசு மீதி | **-** | **-** |
| டிசம்பர் 31 திகதியில் இறுதி காசு மீதி | **-** | **-** |

## 3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

**அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை**

### (1) தயாரிப்புக்கான நோக்கம்

நிதிக் கூற்றுக்கள், அரச நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

### (2) அளவிடல் அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேறு வழிகளில் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில் கணக்கு தயாரித்தல் மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களின் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### (3) வருமானத்தை அடையாளம் காணல்

பரிமாற்ற மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப்பகுதி கருத்தில் கொள்ளப்படாமல் நிதி கிடைக்கும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படுகிறது.

### (4) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணல் மற்றும் அளவிடுதல்

சொத்துக்களுக்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்துக்கு கிடைக்குமென உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அச்சொத்துக்களை நம்பகமாக அளவிடலாம் எனின், அச்சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அடையாளம் காணப்படுவதுடன், கிரய மாதிரிக்கு உரியதல்லாத சந்தர்ப்பத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானம் பயன்படுத்தப்படுகிறது.

### (5) ஆதனங்கள், கிரயம் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கு

இவ் ஒதுக்குக் கணக்கு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்குகளாகும்.

### (6) காசு மற்றும் காசுக்குச் சமமானவை

2024 டிசம்பர் 31 திகதியில் கையிலுள்ள உள்நாட்டு பாவனை நாணய தாள்கள் மற்றும் நாணய குற்றிகளிலான காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளை கொண்டதாகும்

ஏதேனும் அறிக்கைப்படுத்தும் நிறுவனத்துடன் விசேடமான கொடுக்கல் வாங்கல்ள் இருக்கும் சந்தர்ப்பத்தில், குறித்த மாதிரிப் படிவங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள முடியும். அத்துடன் ‘‘அறிக்கையிடல் அடிப்படையின்’’ கீழ் குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான வெளிப்படுத்தல்களை உள்ளடக்க முடியும்.

தமது அறிக்கைப்படுத்தும் நிறுவனத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரமே அறிக்கையிடல் அடிப்படையை வெளிப்படுத்தல் வேண்டும்.

## 3.5 வருமான திரட்டல் செயலாற்றுகை

ரூ.,000

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| 20.06.02.01 | வாகனங்கள் | - | - | - | - |
| 20.06.02.02 | பிற | - | - | 12.34 | - |
| 20.02.01.01 | அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை | - | - | - | - |
| 20.02.01.99 | அரச சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் - வாடகை - ஏனைய வாடகைகள் | - | - | - | - |
| 20.02.02.99 | வட்டி - பிற | 1,000 | 1,000 | 1496.16 | 149.61 |
| 20.03.01.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - திணைக்கள ரீதியான விற்பனை | 1,200 | 2,000 | 1805.66 | 90.29 |
| 20.03.02.99 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் நிர்வாக ரீதியான கட்டணங்கள் மற்றும் நானாவித செலுத்துகை | 20 | - | 48.00 | - |
| 20.03.03.02 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - அபராதம் மற்றும் அரசுடமையாக்கல் - பிற | - | - | - | - |
| 20.03.99.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - பிற கிடைப்பனவு | 500 | 500 | 1976.09 | 395.21 |
| 20.05.99.00 | விலகல்களின் ஒதுக்கீடு, தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய உரிமமளித்தல்கள் | - | - | - | - |

## 3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் உபயோகச் செயலாற்றுகை

| நிதி ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | ரூ.348,000,000.00 | ரூ.350,880,000.00 | ரூ.306,090,566.00 | 87,24 |
| மூலதன | ரூ.181,300,000.00 | ரூ.183,300,000.00 | ரூ.52,531,1623.00 | 28.97 |

## 3.7 நி.ஒ 208 க்கு அமைய, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

| தொ. இல | நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம் | நிதி ஒதுக்கீட்டு குறிக்கோள் | நிதி ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஊடக அமைச்சு | வீத வரி செலுத்துவதற்கு | - | 882,792.00 | 882,792,.00 | 100 |
| | | அமைச்சின் வரிப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 3% செலுத்துதல் | - | 288,000.00 | 198,439.39 | 69 |
| 02. | அரச அச்சக திணைக்களம் | அவர்களது அச்சகப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 25% செலுத்துவதற்கு | - | 1,800,000.00 | 1,653,661.67 | 91.87 |
| 03. | தேர்தல் ஆணைக்குழு | ஜனாதிபதி தேர்தல் கடமைகளுக்கான செலுத்தல்களுக்கு | - | 9,650.00 | 9,650.00 | 100 |
| | | | - | **2,980,442.00** | **1,861,751.06** | **62.46** |

## 3.8 நிதியல்லா சொத்துக்களை அறிக்கைப்படுத்துவதில் செயலாற்றுகை

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2024 திகதியில் பொருட் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய | 31.12.2024 திகதியில் நிதிநிலை அறிக்கைக்கு அமைய | எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படவுள்ள | முன்னேற்றம் % ஆக அறிக்கை செய்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | - | 304,328,182.26 | - | - |
| 9152 | இயந்திரங்கள் | - | 402,129,694.66 | - | - |
| 9153 | காணி | - | 1,227,750,000.00 | - | - |
| 9154 | அருவச் சொத்துக்கள் | - | 4,817,440.80 | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | மேற்கொள்ளப்படும் வேலைகள் | - | 3,000,000.00 | - | - |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் | - | - | - | - |

கணக்கீட்டு அலுவலர்,
அரசாங்க தகவல் திணைக்களம்

**விடயத்தலைப்பு – 210 அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2024 மார்கழி 31 ஆம் திகதி முடிவடைற்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரட் கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

விடயத்தலைப்பு – 210 அரசாங்க தகவல் திணைக்களத்தின் அமைச்சின் 2024 மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த நிதிநிலைமை பற்றிய கூற்றுக்கள், அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள், காசுப்பாய்வுக் கூற்றுக்களுடன் கூடிய 2024 மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) உறுப்புரையில் உட்சேர்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துத் தெரிவிப்புக்கள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஆண்டுக்கான விபரக்குறிப்புக்களுடன் கூடிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வெளியிடப்படுகின்றது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடங்களின் தாக்கங்கள் தவிர்ந்த, நிதிக் கூற்றுக்களின் 2024 மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்வுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுக் கோட்பாடுகளுக்கமைய உண்மையானதும் நியாயபூர்வமானதுமான தோற்றப்பாட்டினை தருவதாகவே எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை**

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.நி) கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள்

அரச நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 மாசி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 மார்கழி 16 ஆம் திகதிய அரச கணக்கீட்டு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இற்கிணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கும் பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தர்களிடம் உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலாகால நிதிக்கூற்றுக்கள தயாரிக்கப்படுவதனை இயலச் செய்வதற்கு, அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் எல்லாம் பற்றிய தகுந்த புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுகின்றமையை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதியளிக்க வேண்டியதுடன், அத்தகைய முறைமையின் பயனுறுதன்மையைக் கண்காணிப்பதற்குக் காலத்தோடு தழுவியதாக மீளாய்வு செய்து, பரிசீலனைகளை நிறைவேற்றுதலையும், அதற்கிணங்க அத்தகைய முறைமைகள் பயனுள்ள வகையில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்தலையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளர் பொறுப்பு

ஒட்டுமொத்தத்தில், நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிருக்காமை மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற உறுதிப்பாடு, மற்றும் எனது அபிப்பிராயத்துடன் கூடிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடளித்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக அமைந்தாலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய, கணக்காய்வை நடாத்தும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்துவதை உறுதிப்பாடளிப்பதாக அமையாது. மோசடி மற்றும் பிறழ்வுகள் தனியான அல்லது ஒன்றித்த தாக்கங்களால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் உருவாவதற்கு இடமுண்டு என்பதுடன், அதன் பொருண்மையான தன்மையை இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டதான பரிசீலிப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது ஏற்படும் தாக்கங்ளில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக, நான் கணக்காய்வின் போது தொழில்வாண்மை தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் பண்புகளுடன் செயலாற்றியுள்ளேன். மேலும் நான்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையை வழங்கும் போது மோசடி மற்றும் தவறுகளால் நிதிக்கூற்றுக்களில் நிகழக்கூடிய பொருண்மையான பிறழ்வுக் கூற்றுக்கள் உருவாகக்கூடிய ஆபத்துக்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக காலத்தோடு தழுவிய பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கூட்டுச்சதி, போலி ஆவணங்கள் தயாரித்தல், திட்டமிட்ட உள்நோக்கத்துடன் தவறவிடல், தவறான விபரக்குறிப்புக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை புறக்கணித்தல் போன்ற காரணங்களால் தவறான விபரக்குறிப்புக்களால் இடம்பெறுகின்ற பொருண்மயமான பிறழ்வுக் கூற்றுக்களால் நிகழக்கூடிய தாக்கங்களை விடவும், மோசடிகளால் நிகழக்கூடிய தாக்கங்கள் பாரதூரமானவையாக அமைகின்றன.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதன்மை பற்றி அபிப்பிராயமொன்றை தெரிவிக்கின்ற நோக்குடன் அல்லாமல், காலத்தோடு தழுவிய பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக புரிதலைப் பெற்றுக்கொண்டுள்ளேன்.
- வெளிப்படுத்தல் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயபூர்வமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களில் ஒட்டுமொத்த முன்வைத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

எனது கணக்காய்வின் போது அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரை தெளிவுபடுத்தியுள்ளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துத் தெரிவிப்புக்கள்**

**1.5.1 நிதியல்லா சொத்துக்கள்**

I. அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 9.25 பேர்ச்சர்ஸ் நிலத்தில் ரூ.1,227,750,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு 2024 மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கி இருப்பினும், அதன் உரிமையை திணைக்களத்திற்கு மாற்றிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை. காணியின் பெறுமதி முழுச்சொத்துப் பெறுமதியின் 63% சதவீதமாகும்.

II. குறித்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கமைய நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் மேற்கொண்டு செல்லப்படும் வேலைகளாக ரூ. 4,832,668 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வு ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக முன்கொணர்ந்த தொகையாக ரூ.3,000,000 என குறிப்பிடப்பட்டுள்ளமையால், ரூ. 1,832,668 விலகல் அவதானிக்கப்பட்டுள்ளது.

III. அரசாங்க தகவல் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூ.4,000,000 பெறுமதியான சட்டபூர்வமாக அஞ்சல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டமையைக்

குறிப்பிட்டுள்ளதுடன், மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்திற்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும், மீளாய்வு ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் இவ்வாகனங்களின் பெறுமதி உட்சேர்க்கப்பட்டுள்ளது. சட்டபூர்வமாக திணைக்களத்திற்கு உரித்தல்லாத வாகனங்கள் இரண்டினை திணைக்களத்தின் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமையால், நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியால் அப்பெறுமதி அதிகரித்துக் காணப்படுகின்றது.

**IV.** 1999 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின்கடன் உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தொழிநுட்ப முறைகள் காலங்கடந்தமையால் பயன்பாட்டுக்கு உதவாமல் காணப்படுகின்ற எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்கள் இல்லாத Debri புகைப்பட ஆய்வுகூட இயந்திரம் ரூ. 12,000,000 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தேய்மானக் கழிவுப் பெறுமானத்தை அடையாளங்கண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.5.2 ஆவணங்கள் மற்றும் கணக்கேடுகளைப் பேணாமை

திணைக்களத்தால் கீழ்க்காணும் ஆவணங்கள் பேணிச் செல்லப்படாததுடன், ஒருசில ஆவணங்களை முறைசார்ந்த வகையிலும் இற்றைப்படுத்தியும் பேணிச் செல்லாமை மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

| ஆவண வகைகள் | ஏற்புடைய ஒழுங்குவிதி | அவதானிப்பு |
|---|---|---|
| பிணை ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 898(1) | இற்றைப்படுத்தப்படாமை |
| நட்ட இழப்பு ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 110 | இற்றைப்படுத்தப்படாமை |
| பொறுப்புப் பற்றிய ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 314 | இற்றைப்படுத்தப்படாமை |
| வாகனங்கள் பட்டியல்படுத்தும் ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 1647(ஈ) | பேணிச் செல்லப்படவில்லை |

## 2. ஏனைய சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம்இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ) உபபிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் விடயங்களைத் தெரிவிக்கின்றேன்.

I. கணக்காய்வுக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் ஒத்திசையவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள் (சுருக்கமாக)** | **இவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்ட பந்தி** |
|---|---|
| நிதியல்லா சொத்துக்களுக்கு ஏற்ப 2023 ஆண்டிறுதி மீதி மற்றும் 2024 ஆண்டின் ஆரம்பப் பெறுமதி இணங்கவில்லை | 1.5.1(ii) |

II. கடந்த ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் வழங்கிய கீழ்க்காணும் விதந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

| **கடந்த ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்தி** | **நடைமுறைப்படுத்தாத விதந்துரை** | **இவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்ட பந்தி** |
|---|---|---|
| 1.2.2(அ)i | சொத்துச் செலவு மற்றும் உபகரணங்களை சரியான வகையில் அடையாளங் காண வேண்டும். | 1.5.1(iv) |

**3. நிதி மீளாய்வு**

**3.1 செலவு முகாமைத்துவம்**

கீழ்க்குறிப்பிட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

3.1.1 திணைக்களத்திற்கான ரூ. 183,300,000 மூலதனச் செலவுக்கு நிகர நிதியொதுக்கீடு காணப்பட்டுள்ளதுடன், மீளாய்வு வருட இறுதியில் ரூ. 52,531,163 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மூலதனச் செலவு 73% சதவீதம் எஞ்சியிருந்தது.

**3.1.2 நிதியொதுக்கீடு மாற்றம் செய்யப்பட்டமை**

நிதி ஒழுங்குவிதி 50 இற்கமைய, தமது திணைக்களத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு, நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கித் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்குப் பொறுப்பு உள்ளது. மீளாய்வு ஆண்டுக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்தமாக 22 மீண்டெழும் செலவு விடயங்களில், 08 மீண்டெழும் செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 26,534,060 நிதியானது வேறு மீண்டெழும் செலவு விடயங்கள் 05 உம் மற்றும் மூலதன செலவு விடயத்திற்கும் மாற்றப்பட்டிருப்பதால், நிதி ஒழுங்குவிதிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்பட்டு, உண்மை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2 **பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்**

I. மீளாய்வு ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கமைய, தீர்க்கப்படாத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ரூ.9,484,680 ஆவதுடன், பொறுப்புக் கணக்கேட்டில் பொறுப்புக்கள் ரூ. 10,510,212 இருப்பினும், ரூ.1,025,532 விலகல் அவதானிக்கப்பட்டுள்ளது.

II. நி.ஒ 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதியொதுக்கீடு இருப்பின், எந்தவொரு திணைக்களத்தால் வேலையொன்றோ அல்லது சேவையொன்று அல்லது விநியோகமொன்றின் யாதொரு செலவுக்கோ அல்லது பொறுப்புக்கோ கடப்பாடு

இல்லாதிருத்தல் வேண்டும். அத்துடன், அதற்கான பொறுப்புக்கள் மற்றும் செலவுத் தொகை ஒருபோதும் நிதியாண்டின் நிதியொதுக்கீட்டை விஞ்சாத வகையில் இருக்க வேண்டியதுடன், 2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவு விடயங்கள் இரண்டுக்காக ரூ. 1,041,633 நிதியொதுக்கீட்டை விஞ்சிய பொறுப்புக்களாக இருக்கின்றது.

### 3.3 சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

| சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகள் முன்னிலைப்படுத்தல் | இணங்காமை |
|---|---|
| 1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குகள் (அ) நி.ஒ 104 | திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் 2024 ஆம் ஆண்டில் விபத்துக்கு உள்ளாகியுள்ளதுடன், இவ்விபத்து தொடர்பாக நிதி ஒழுங்குகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) நி.ஒ 802 (01) | வாகனங்கள் இயங்காமல் இருக்கின்றமையை நிறுவனப் பிரதானி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பினும், திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்று 2023 ஆண்டு தொடக்கம் கணக்காய்வு அறிக்கையிடும் திகதி வரை இயங்காமல் இருந்துள்ளது. |
| (ii) 2020 ஆவணி 28 ஆம் திகதிய 02/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வருடாந்த நிதிசார் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களை விஞ்சாமல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகை அறிக்கைகள் 2023 ஆடி மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிசார் செயலாற்றுகை அறிக்கை 2025 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆம் திகதியாகும் போதும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 3.4 முற்பணம்

கடமையிலிருந்து விலகிச் சென்றுள்ள உத்தியோகத்தரிடமிருந்து 20 வருடங்களாக அறவிடப்பட வேண்டிய ரூ.123,475 கடன் மீதி 2025 மாசி 28 ஆம் திகதியாகும் போதுகூட அறவிடப்படவில்லை.

### 3.5 முறைசாரா பரிவர்த்தனைகள்

i) நிறுவனத்தின் நூலக முகாமைத்துவ முறைமை, மனிதவள முகாமைத்துவ தகவல் முறைமை வேலைப்பாய்வு மற்றும் அஞ்சல் முகாமைத்துவ முறைமை (Work Flow and Postal management System) இனை நிறுவுவதற்காக ரூ.1,633,781 செலவிடப்பட்டுள்ளதுடன், நேரடி ஒப்பந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மூலம் மேற்படி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைமைகள் நடைமுறை ரீதியாக விடுமுறைகள் மற்றும் வெளிச் செல்லல், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகள் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்துகின்ற விதம் பற்றி திட்டவட்டமாக அடையாளங் காணப்படவில்லை. இதுதொடர்பாக DGI/DM/DIT/HRMS மற்றும் 2024 ஐப்பசி 07 ஆம் திகதி அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் அவர்களின் கடிதத்தின் மூலம் தொழிநுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பினும், குறித்த குழு தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட உத்தியோகத்தர்களைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அ) மேற்படிக் குழுவில் ஒரு உத்தியோகத்தர் இரத்துச் செய்யப்பட்ட தேசிய ஊடக மையத்தால் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட ஊடகப் புலனாய்வு உதவியாளர் எனும் இரண்டாம் நிலை (தொழிநுட்பமற்ற) பதவியைக் கொண்டிருந்த உத்தியோகத்தவராவர். குறித்த உத்தியோகத்தரை திணைக்களத்தின் பணிக்குழாமில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவின் மூன்றாம் நிலைப் பதவியான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்காக 2023 மாசி மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆ) மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் இதுவரை முறைசார்ந்த ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படவில்லை எனினும், குறித்த பணிகள் உயரிய மட்டத்தில் இடம்பெற்றுள்ளமையை எந்தவொரு சான்றுப்படுத்தலின்றி மொத்த செலவுறுதிச் சிட்டைப் பெறுமதிக்கும் 02 காசோலைகள் 2024 மார்கழி 30 ஆம் திகதி வரையப்பட்டு பணிப்பாளர் (நிருவாகம்) பொறுப்பில் இவ்வறிக்கையிடல் திகதி வரைக்கும் வைத்துக் கொள்ளப்பட்டது.

II) திணைக்களத்தின் ஊடகக் கலந்துரையாடல் மற்றும் ஏனைய கூட்டங்களின் போது ZOOM இணையவழியுத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளதுடன், குறித்த தொழிநுட்ப வசதிகள் தனியார் நிறுவனமொன்றின் மூலம் பெற்றுக்கொண்டமையால், 2024 ஆம் ஆண்டில் குறித்த நிறுவனத்திற்கு ரூ. 1,550,000 சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. திணைக்களம் நேரடியாக இவ்வசதியைப் பெற்றுக் கொண்டால் மொத்தச் செலவு குறைந்தபட்சம் ரூ. 120,000 ஆக இருப்பதால், திணைக்களத்திற்கு ஆண்டுக்கு ரூ.1,430,000 தொகை மேலதிகமாக செலவிட நேரிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 பணிகள் நிறைவேற்றப்படாமை

(i) செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய எந்தவொரு பௌதீக முன்னேற்றமில்லாத 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்கு ரூ.41.33 மில்லியன்கள் நிதியொதுக்கீடு செய்யப்பட்ட 08 நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்பட்டிருப்பினும், குறித்த நிதியொதுக்கீடு குறித்த ஆண்டில் ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்படவில்லை.

(ii) மீளாய்வு ஆண்டுக்குரிய செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய ஆண்டின் நிதிசார் முன்னேற்றத்தை நோக்கும் போது 50% சதவீதத்தை விடவும் குறைவான முன்னேற்றத்தைக் காட்டுகின்ற 05 நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்பட்டன.

#### 4.1.2 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்களை அடையாமை

நிறுவனத்தின் உள்ளகத் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு அவசியமான PABX முறைமையை நிறுவுகின்ற நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வு ஆண்டு முடிவடையும் போதும் கூட பூர்த்தி செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

#### 4.1.3 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் (Outcome) அடையாமை

2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.5,103,500 பெறுமதியுடன் கூடிய 04 மடிக் கணணிகள் மற்றும் 11 கணணிகள் 2024 மார்கழி 31 ஆம் திகதி தனியார் கம்பனியொன்றில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த கணணிகள் எதிர்பார்க்கப்பட்ட விபரக்குறிப்புக்களுக்கு இணங்காமையால், 2024 மார்கழி 31 ஆம் திகதி தொடக்கம் 2025 பங்குனி மாதம் 31 ஆம் திகதி வரை பயன்பாட்டு எடுத்துக்கொள்ளவில்லை.

#### 4.1.4 வருடாந்த நிதிசார் செயாற்றுகை அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) உபபிரிவுக்கமைய செயலாற்றுகை அறிக்கை ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பெறுகைகள்

i) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 இன் பிரகாரம், குறைந்தபட்சம் மூன்று வருடங்களுக்கு எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஆண்டுக்கான பெறுகை நடவடிக்கைகள் விபரங்களுடன் கூடியதாகத் தயாரிக்கப்படல் வேண்டும். திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள பெறுகைத் திட்டம் 2024 ஆண்டுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டதாகும்.

ii) அ) மீளாய்வு ஆண்டுக்காக 15 மடிக்கணணிகள் மாத்திரம் அவசியமென்ற தேவையைக் குறிப்பிட்டிருப்பினும், பின்னர் திணைக்களத்தின் தலைமையலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகத் தேவைகளெனக் குறிப்பிட்டு

ரூ.9,877,779 பெறுமதியுடன் கூடிய 17 மடிக்கணணிகள் மற்றும் 12 டெஸ்ரொப் கணணிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ஆ) 01/2024 மற்றும் 2024 தை 10 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்டத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், அவசர கொள்வனவு இடம்பெறாமல் இருக்கும் வகையில் தேவைகளை முற்கூட்டியே கண்டறிந்து அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கமைய, பெறுகை நடவடிக்கைகளின் தாமதங்களைக் குறைக்கும் வகையில் செயற்பட்டாலும், கணணிக் கொள்வனவு தொடர்பான தீர்மானங்கள் 2024 கார்த்திகை மாதம் 26 ஆம் திகதி எடுக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் தேவைகளை முற்கூட்டியே தீர்மானித்து பெறுகைத் திட்டத்தில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. 2024 ஆம் ஆண்டில் குறித்த திருத்தங்களை உட்சேர்த்து திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

### 4.3 அரச அலுவலர்களின் பிணை வைப்பு

நிதி ஒழுங்குவிதி 880 இன் பிரகாரம் அரச அலுவலர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிணை வைப்பிலிட வேண்டுமெனினும், திணைக்களத்தில் பிணை வைப்பிலிட வேண்டிய 04 அலுவலர்கள் பிணை வைப்பிலிடவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

### 4.4 பொருண்மயமற்ற பரிவர்த்தனைகள்

i) வடக்குப் புகையிரத நவீனமயப்படுத்தல் தொடர்பான ஊடக நிகழ்ச்சித்திட்டமொன்று ரூ. 239,481 செலவிட்டு தயாரிக்கப்பட்டிருப்பினும், இதுவரை எவ்வித ஊடக வலையமைப்பில் ஒளிபரப்பப்படவில்லை. குறித்த நிகழ்ச்சித்திட்டம் 05 நிமிடங்கள் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பினும், 30 நிமிடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

ii) இலங்கை அரசு மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் குழுவுடன் பிரான்ஸ் பாரிஸ் நகரில் 2024 ஆனி மாதம் 26-29 வரையான காலப்பகுதியில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடக நிகழ்ச்சித் தயாரிப்புக்காக வெளிநாடு செல்வதற்கு குறித்த தினத்தில் வீசா பெற்றுக்கொள்ளாமையால் விமானப் பயணச்சீட்டுக்களின் காலநீடிப்புக்காக ரூ. 169,200 மிகைக்கட்டணத்தை செலுத்துவதற்கு நேர்ந்துள்ளமையால், ஊடகக் குழுவினர் பிரான்சுக்கு செல்லும் போது குறித்த ஒப்பந்தங்கள் அனைத்தும் கையொப்பமிட்டு முடிவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்டுள்ள ரூ.1,804,421 தொகை பயனற்ற செலவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

### 4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

i) தெசத்திய சஞ்சிகையில் 2024 ஆம் ஆண்டுக்கான அச்சிடல் மற்றும் கட்டுரை ஆசிரியர் செலவு ரூ. 3,299,994 ஆவதுடன், விற்பனை வருமானம் ரூ. 772,339 ஆகும். அதற்கமைய, ரூ.2,527,655 நட்டம் ஏற்பட்டுள்ளது. நட்டத்தைக் குறைக்கும் வகையில் செலவை ஈடு செய்யக்கூடிய வகையிலான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு

செயலாற்றாததுடன், அச்சிடுகின்ற இதழ்களின் விற்பனை வருமானத்தை வேறுவேறாக அடையாளங் காண்பதற்கான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii) அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய கேட்போர் கூடத்திற்கு மின்னுற்பத்தி இயந்திரமொன்று வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டமை 2022 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை ரூ.4,455,270 வாடகைச் செலவு செய்யப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரசாங்க செய்தித்திட்டம் மற்றும் அபிவிருத்திச் செயன்முறை தொடர்பாக தெளிவூட்டல்களை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக நிறுவனத்தில் தொடர்ந்து மின்னுற்பத்தி இயந்திரமொன்று அவசியமானதென அவதானிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 100,300,000 நிதியொதுக்கீடு செய்யப்பட்டாலும், 2024 ஆம் ஆண்டு மின்னுற்பத்தி இயந்திரத்தின் தேவை பெறுகைத் திட்டத்தில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

iii) தனியார் கம்பனியொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட 15 கணணிகளுக்காக செலுத்தல்களுக்காக 312329 மற்றும் 2024 மார்கழி 29 ஆம் திகதிய காசோலை தயாரிக்கப்பட்டு 2025 பங்குனி 31 ஆம் திகதி வரை குறித்த தரப்பினருக்கு ஒப்படைக்காமல் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தமை. 2024 மார்கழி 31 ஆம் திகதி திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு உரிய கணணிகள் கிடைக்கப்பெற்றமையை பெறுகைக் கோவைக்கமைய அவதானிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கணணிகள் களஞ்சியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு முன்னரே குறித்த காசோலை வரையப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த கணணிகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமையை பிரிவின் பிரதானி, டிஜிட்டல் மற்றும் தகவல் தொழிநுடபப் பிரிவின் மூலம் 2024 மார்கழி 31 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருப்பினும், அதனை கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியில் விற்பனை முகாமையாளருக்கு 2025 பங்குனி மாதம் 20 ஆம் திகதியே எழுத்துமூல அறிவிக்கப்பட்டிருந்தது.

## 5. பேண்தகு அபிவிருத்தி

### 5.1 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையாளங் காணல்

2017 ஆம் ஆண்டின் 19 இலக்க இலங்கை பேண்தகு அபிவிருத்திச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் கட்டளைகளுக்கமைய நிறுவனத்தின் பேண்தகு இலக்குகளை அடையாளங் காணும் போது 06 நோக்கங்கள் அடையாளங் காணப்பட்டிருப்பினும், இலக்குகளைப் பூர்த்தி செய்யும் சவால்களாகப் போதியளவு நிதி கிடைக்காமை மற்றும் காலத்துக் காலம் அரச சுற்றறிக்கைகள் மூலம் நிதியொதுக்கீடுகளின் மட்டுப்பாடுகள் குறிப்பிடப்பட்டிருப்பினும், கிடைக்கின்ற நிதியொதுக்கீட்டைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி நிறுவனத்தின் விடயதானத்திற்கு மற்றும் நிதிசார் இயலுமைக்குப் பொருத்தமான வகையில் பேண்தகு நோக்கங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 6. உள்ளகக் கணக்காய்வு

2024 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கமைய 12 துறைகளுக்கு ஏற்புடையதாக உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பினும், அவற்றில் 07 துறைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை.

## 7. மனிதவள முகாமைத்துவம்

i) அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பொறுப்பு முறையான கடமை ஒப்படைப்புப் பட்டியல் மூலம் சட்டம்.ஃவர்த்தமானி அறிவித்தல் மூலம் வலுவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.

ii) 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் புதிய நியமனம் பெற்று திணைக்களத்தில் இணைப்புச் செய்யப்பட்ட 63 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மேலும் 24 செய்தி உத்தியோகத்தர்கள் பதவிகள், 11 ஊடகப் புலனாய்வு உதவியாளர் பதவி, 04 இணையத்தள எழுத்தாளர் பதவி உள்ளிட்ட 103 பதவிகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாமில் உட்சேர்க்கப்படாமல் நிறுவனத்தில் பணிபுரிகின்றமை அவதானிக்கப்படுகின்றது.

### 7.1 இணைப்புச் செய்யப்பட்ட பணிக்குழாம் மற்றும் உண்மையான பணிக்குழாம்

திணைக்களத்திலும் 05 ஆண்டுகளைக் கடந்தும் பணியாற்றி வருகின்ற 68 பேரில் 13 பேர் 11 – 15 ஆண்டுகளும், 15 ஆண்டுகளைக் கடந்த பணியாளர்கள் 30 பேரும், திணைக்களத்தில் பணியாற்றியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**ஒப்பம் : ஜீ.எச்.ஐ விந்தியா**
**சிரேட்ட உதவிக் கணக்காய்வாளர்**
**பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

# 04 அத்தியாயம்

## செயலாற்றுகை சுட்டிகள்

# செயலாற்றுகை சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (2024 செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய)

| விசேட சுட்டிகள் | | எதிர்பார்க்கும் அடைவுகளின் வீதம் (%) ஆக உண்மை அடைவுகள் | | |
|---|---|---|---|---|
| | | 100%- 90% | 89%-51% | 50% - 10% |
| **ஊடக சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தல்** | | | | |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தல் | | | 85% | |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல் நேரலையைப் பதிவு செய்தல், நேரடியான செய்தி ஒலி/ஒளிபரப்பு) | | 100% | | |
| அரசின் விசேட வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடக சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| **ஊடக அறிக்கைப்படுத்தல்கள் (Media Coverage)** | | | | |
| ஊடகப் பிரச்சாரப் பிரிவின் மூலம் வேறு நிறுவனங்களால் நடாத்தப்படும் ஊடக சந்திப்புக்கள்/ஊடகப் பதிவுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் | | 100% | | |
| வீடியோ படப்பிடிப்புப் பிரிவின் மூலம் மற்றும் நிழற்படப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செய்திப் பதிவுகள்/ஊடகப் பதிவுகள் | | 100% | | |
| அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடகக் கண்காணிப்புக் களத்தரிசிப்புக்களை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| மாவட்ட ஊடக அலகுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செய்திப் பதிவுகள் | | 100% | | |
| தேசிய மற்றும் சர்வதேச வைபவங்களின் போது ஊடக ஒருங்கிணைப்புக்கள் மற்றும் ஊடகப் பதிவுகள் | | 100% | | |
| **சமூக ஊடகங்களை இற்றைப்படுத்தல்** | | | | |
| மும்மொழிகளிலும் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | www.dgi.gov.lk | 100% | | |
| | www.news.lk | 100% | | |
| DGI மற்றும் News.lk | Facebook | 100% | | |
| | X (Twitter) | 100% | | |
| | YouTube | 100% | | |
| மாவட்ட ஊடகப்பிரிவு | Facebook | 100% | | |
| அரச திரைப்படப் பிரிவு | YouTube | 100% | | |
| | Facebook | 100% | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பாடசாலை ஊடக மேம்பாட்டுப் பிரிவு | YouTube | 100% | | |
| **தயாரிப்பு நடவடிக்கைகள்** | | | | |
| விவரணத் திரைப்படத் தயாரிப்பு, உரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் குறுங்காணொளித் தயாரிப்புக்கள் | | 100% | | |
| அரச வீடியோ விளம்பரங்கள் தயாரிப்பு | | 100% | | |
| அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் விசேட ஊடக சந்திப்புக்களை சைகை மொழியிலும் தமிழ் மொழியிலும் தயாரித்தல் | | 100% | | |
| **வெளியீடுகளைப் பிரசுரித்தல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்** | | | | |
| தெசத்திய சஞ்சிகை வெளியீடு | | 100% | | |
| தேசிய ஊடக உரையாடல் நூலின் 3 ஆம் மற்றும் 4 ஆம் பகுதிகளை வெளியிடல் | | 100% | | |
| நாளாந்தம் கட்புல, செவிப்புல, அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பகுப்பாய்வு அறிக்கையை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரித்தல் | | 98% | | |
| **வெகுசன ஊடக மேம்பாடு மற்றும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்தல்** | | | | |
| சர்வதேச ஊடக மாநாடுகளை (Media Symposium) ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விரிவுரைகளை நடாத்துதல் | | 100% | | |
| நூல்கள் மற்றும் செய்திச் சஞ்சிகள் ஒவ்வொரு பாடசாலைக்கும் 50 வீதம் பாடசாலைகளுக்கு விநியோகித்தல் | | | 56% | |
| பாடசாலை மாணவர்களுக்கான குறுங்கதைகள் மற்றும் குறுந்திரைப்படப் போட்டிகளை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்கல் | | | | 49% |
| 250 பாடசாலை ஆசிரியர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கல் | | 91% | | |
| பாடசாலை ஊடகக் கழகங்களுக்கான E-NewsPaper வெளியீடு | | | | 33% |
| ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| பொலிசு மற்றும் முப்படையில் ஊடக அலுவலர்களுக்கான பயிற்சிகளை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆய்வுக்கட்டுரைகளுக்கு பயிற்சி பெறுகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் களத்திற்கு வருகைதருகின்ற பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான மாதிரிகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகளை வழங்கல் | | 100% | | |
| திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் | | 100% | | |

| நிழற்பட திரைப்படக் காப்பு | | | |
|---|---|---|---|
| நிழற்பட நூலகத்தில் பழைய புகைப்படச் சுருள்களை ஸ்கான் செய்து (புகைப்படக் காப்பு) மற்றும் நிரந்தர டிஜிட்டல் காப்பகத்தில் அனைத்து புகைப்படங்களையும் பாதுகாத்தல் | 100% | | |
| டிஜிட்டல் நிழற்படப் பதிவுகளை நிழற்படக் காப்பகத்தில் பாதுகாத்தல் | 100% | | |
| அரச திரைப்படப் பிரிவுக்குச் சொந்தமான பதிவுகள் மற்றும் செய்தித் திரைப்படப் பாதுகாப்புக்குரிய திரைப்படங்களைத் தூய்மைப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் ஊடகமாக மாற்றியமைத்தல் | 100% | | |

# 05 அத்தியாயம்

## பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

# பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / நோக்கம் | இலக்கு (உலகளாவிய இலக்கு) | அடைவுச் சுட்டிகள் | இதுவரை அடையப் பெற்ற விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும், அனைத்து வயதிலும் நல்லாரோக்கியத்தை ஊக்குவித்தல் **(SDG 03)** | நோயற்ற வாழ்வும் நல்லாரோக்கியமும் பேணல் | "பரம்பரை மரபணு நோய்" தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்காக GENE CLINIC கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு | - | - | 100% |
| | | என்பு நோய் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்காக "DGI Health Talk" உரையாடல் நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு | | | |
| சமமானதும் உள்வாங்கலுடன் கூடியதுமான கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கல்வியைப் பெறும் வாய்ப்புக்களை அதிகரித்தல் **(SDG 04)** | பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிலுநர் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கல் | குறித்த ஆண்டில் 35 பயிலுநர் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கல். | - | - | **100%** |
| | திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கல் | ஒரு உத்தியோகத்தருக்கு குறைந்தது 12 மணித்தியாலயங்கள் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கல் | - | - | **89%** |
| பால்நிலைச் சமத்துவத்தை அடைதல் மற்றும் பெண்கள் பெண் பிள்ளைகளை வலுவூட்டல் **(SDG 05)** | எதிர்காலத்தில் ஊடக தொழில்வாண்மையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக பாடசாலை ஊடகக் கழகங்களில் மாணவிகளை வலுவூட்டல் | மகளிர் விவகார அமைச்சின் முன்னேற்றங்கள் தொடர்பான விவரண விவரண நிகழ்ச்சித் தயாரிப்பு | - | - | **80%** |

## 5.2 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றி மற்றும் சவால்கள் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றி :**

1. “பரம்பரை மரபணு நோய்” தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்காக GENE CLINIC கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு
2. என்பு நோய் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்காக "DGI Health Talk" உரையாடல் நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு
3. மகளிர் விவகார அமைச்சின் முன்னேற்றங்கள் தொடர்பான விவரண விவரண நிகழ்ச்சித் தயாரிப்பு
4. தகவல் அறிதல் சட்டத்தை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய விவரண நிகழ்ச்சித் தயாரிப்பு
5. தெசத்திய சஞ்சிகை மூலம் நல்லாரோக்கியத்தை மேம்படுத்தும் கட்டுரை வெளியீடு
   - மீண்டும் தலைதூக்கும் சின்னம்மை – மாசிமாத இதழ் (30 – 31 ஆம் பக்கம்)
   - உயரத்திற்கேற்ற எடை குன்றிய – சித்திரை மாத இதழ் (11 – 12 ஆம் பக்கம்)
   - நோயற்ற துடிப்பான பிள்ளைகள் பரம்பரை – வைகாசி இதழ் (19 – 28 ஆம் பக்கம்)
   - செயற்கை நுண்ணறிவைத் தேடி கொரிய தேசத்திற்கு – ஆவணிமாத இதழ் (09 – 10 ஆம் பக்கம்)
   - சமச்சீரான உணவு வேளை ஆரோக்கியமான வாழ்வு தரும் - ஐப்பசிமாத இதழ் (09 – 11 ஆம் பக்கம்)
   - M பொக்ஸ் வைரஸ் - ஐப்பசிமாத இதழ் (7-8 பக்கம்)

❖ **சவால்கள் :**

1. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தனியார் ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
2. தொழிநுட்ப வளர்ச்சியால் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தல்.
3. சர்வதேச மட்டத்திலான ஊடகத் தொழில்வாண்மையாளர்களை உருவாக்கல்.
4. அரச மற்றும் தனியார் துறையினருடன் தரப்பண்புடன் கூடிய ஊடகக் கலாச்சாரத்தை உருவாக்கல்.

# 06 அத்தியாயம்

## மனித வளக் கட்டமைப்பு

# மனித வளக் கட்டமைப்பு

## 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 19 | 07 | 12 | 0 |
| மூன்றாம் நிலை | 16 | 02 | 14 | 0 |
| இரண்டாம் நிலை | 243 | 150 | 93 | 0 |
| ஆரம்பநிலை | 52 | 40 | 14 | 0 |
| ஒப்பந்தம் | 13 | - | 13 | 0 |
| மொத்தம் | 343 | 199 | 144 | 0 |

* 2023.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியில் உள்ளடங்காத தேசிய ஊடக நிலையத்திற்கு வருகைதந்த 39 உத்தியோகத்தர்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 63 பேரும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு கடமையில் ஈடுபடுகின்றனர்.

**அங்கீகரிக்கப்படாத பணியாட்தொகுதியில் உள்ளடங்காத உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| தேசிய ஊடக நிலையத்திற்கு வருகைதந்த உத்தியோகத்தர்கள் | 39 |
| 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் | 63 |
| **மொத்தம்** | **102** |

## 6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது சுருக்கமாக காட்டப்படுகிறது.

மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மனித வள பற்றாக்குறையானது திணைக்களத்தின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது. குறிப்பாக தொழிநுட்ப பணிகளை மேற்கொள்கின்ற ஆளணியில் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றும் போது சிரமங்கள் ஏற்படுகின்றது. அதாவது, திணைக்களப் பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அறிவு மற்றும் திறமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல் அதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அத்துடன் அப்பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்குவதில் காணப்படுகின்ற தடைகள் காரணமாகவும் தற்போது பல மட்டங்களிலுள்ள பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகிறது.

## 6.3 மனிதவள அபிவிருத்தி

| பாடநெறி/பயிற்சி செயலமர்வின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட பணிக்குழாமினர் | செயலமர்வுக் காலம் | மொத்த முதலீடு ரூ. | | செயலமர்வின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | அடைந்த பெறுபேறு/அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| Digital Maketing | 12 | 2024 மாசி 21 மற்றும் 22 | ரூ.156,000.00 | - | உள்நாட்டு | சமூக ஊடக மேம்பாடு |
| விடுமுறை எழுதுவினைஞர்களின் பணிப்பொறுப்புக்கள் | 01 | 2024 மாசி 21 மற்றும் பங்குனி 01 | ரூ. 13,000.00 | - | உள்நாட்டு | விடுமுறை விடயதானம் தொடர்பான அறிவு விருத்தி |
| நூலக வளங்களை டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் அதன் தொழிநுட்பப் போக்குகள் தொடர்பான பாடநெறி | 02 | 2024 பங்குனி 11 | ரூ.5,000.00 | - | உள்நாட்டு | அச்சு வளங்களை டிஜிட்டல்மயப்படுத்திப் பாதுகாத்தல் |
| Conducting Training of Trainers Program for Ministry of Mass Media and its Affiliated Government Media Institutions | 04 | 2024 சித்திரை 03 மற்றும் 04 | இலவசம் | - | உள்நாட்டு | நிகழ்ச்சித்திட்ட சமர்ப்பணம் தொடர்பான அறிவு விருத்தி |
| விலைமனு ஆவணங்கள் தயாரித்தல் | 02 | 2024 சித்திரை 02 | ரூ. 27,000.00 | - | உள்நாட்டு | பெறுகைச் செயன்முறை பற்றிய அறிவு |
| வேலை ஒப்பந்தங்கள் பற்றிய நிர்வாகம், செலுத்தல் நடவடிக்கை முறைகள் வேலை ஒப்பந்தங்களின் ஆவணங்களைப் பேணல் | 02 | 2024 சித்திரை 04 | ரூ.7000.00 | - | உள்நாட்டு | வேலை ஒப்பந்தங்கள் பற்றிய நிர்வாகம் பற்றிய அறிவுவிருத்தி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள் | 60 | 2024 பங்குனி 22 தொடக்கம்28 வரை | இலவசம் | - | உள்நாட்டு | அலுவலக மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு விருத்தி |
| தனிப்பட்ட கோவைகளை பயனுள்ள வகையில் பேணிச் செல்வதற்கான பயிற்சிப் பாடநெறி | 06 | 2024 ஆனி மாதம் 24 | ரூ.30,000.00 | - | உள்நாட்டு | தனிப்பட்ட கோவைகளை பயனுள்ளவாறு பேணுவதில் விருத்தி |
| மூன்றாவது சர்வதேச தேசிய நூலக ஆய்வு மாநாடு – 2024 | 01 | 2024 புரட்டாதி 06 | ரூ.2500.00 | - | உள்நாட்டு | நூலக முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| நிறுவன முகாமைத்துவம் பற்றிய பயிற்சி பட்டறை | 04 | 2024 ஆவணி 29 | ரூ.48,000.00 | - | உள்நாட்டு | கோவை முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| செலவு மற்றும் செலுத்தல் நடவடிக்கை முறை – FR | 04 | 2024 புரட்டாதி 12 | ரூ.48,000.00 | - | உள்நாட்டு | செலவு மற்றும் செலுத்தல் தொடர்பாக அறிவை இற்றைப்படுத்தல் |
| வரிச் சட்டம் மற்றும் வருமான வரிப் பொறுப்புக்களை கணிப்பிடல் | 04 | 2024 கார்த்திகை 05 | ரூ. 48,000.00 | - | உள்நாட்டு | வரி கணிப்பீடு பற்றிய அறிவு |
| அலுவலக முறை பொதுப் பயிற்சிப் பாடநெறி | 89 | 2024 கார்த்திகை 11 | ரூ.80,000.00 | - | உள்நாட்டு | அலுவலக நடவடிக்கைகள் பற்றிய பொது அறிவு |
| வருடாந்த களஞ்சிய ஆய்வு மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்கள் அகற்றல் | 11 | 2024 கார்த்திகை 26 | ரூ.132,000.00 | - | உள்நாட்டு | களஞ்சிய ஆய்வு பற்றிய அறிவு |

## 6.4 நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பயிற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக தெளிவுபடுத்தப்படுகிறது.

அரச சேவையில் புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பாக வெளிவாரி நிறுவனங்கள் மூலம் உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் தமது கடமைகளை சரியாக, முறையாக மற்றும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான இயலுமை கிடைத்துள்ளது. அத்துடன் இதன் மூலம் ஆளணியினருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இப்பயிற்சிப் பாடநெறிகள் மூலம் கடமைச் சூழலில் காணப்படுகின்ற சலிப்புத்தன்மையை இல்லாது செய்து, புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அறிவை இற்றைப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்தக்கு கொண்டு வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

உத்தியோகத்தர்கள் பயிற்சிப் பாடநெறிகளில் பங்குபற்றுவதன் மூலம் திணைக்களத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டும்.

# 07 அத்தியாயம்

## இணக்க அறிக்கை

## இணக்க அறிக்கை

| இல | ஏற்புடையதாக்க வேண்டிய தேவை | இணக்க நிலை (இணங்குகின்றது / இணங்கவில்லை) | இணங்கவில்லை எனின் அதற்கான சுருக்கமான தெளிவுபடுத்தல் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உத்தேசிக்கும் சரியான தீர்மான செயன்முறை |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதிக்கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் | இணங்குகின்றது | - | - |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பண கணக்கு | இணங்குகின்றது | - | - |
| 1.3 | தொழில்முயற்சி மற்றும் உற்பத்தி முற்பண கணக்கு (வர்த்தக முற்பண கணக்கு) | ஏற்புடையதல்ல | - | - |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல | - | - |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல | - | - |
| 1.6 | பிற | ஏற்புடையதல்ல | - | - |
| **2** | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் (நி.ஓ. 445)** | | | |
| 2.1 | 267/2018 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.2 | தனிநபர் சம்பள பதிவேடு / தனிநபர் சம்பள அட்டை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.3 | கணக்காய்வு ஐயவினா பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சாராம்சம் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.7 | இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.8 | மொத்த இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.9 | இழப்பு, நட்டப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.10 | பொறுப்புகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.11 | உப படிவங்கள் (GA – N 20) பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை கூட்டிணைத்தல் (நி.ஓ. 135)** | | | |
| 3.1 | நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 3.2 | நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | - | - |
| 3.3 | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையான அலுவலர்களால் அங்கீகரிக்கப்படும் | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | வகையில் அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல். | | | |
| 3.4 | 2014.05.11 திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பளச் சிட்டை மென்பொருள் பெக்கேஜ் பாவனையின் போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **4** | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் | இணங்குகின்றது | - | - |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | இணங்குகின்றது | - | - |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணங்குகின்றது | - | - |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணங்குகின்றது | - | - |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 4.6 | காலாண்டு அறிக்கை குறித்த தினத்தில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | **கணக்காய்வு ஐயவினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களால் விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு, அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கியிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஒ 134 (2) DMA/1-2019 இலக்கத்துக்கு அமைய ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல். | இணங்குகின்றது | - | - |
| 6.2 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | தகவல்களைக் கண்டறிவதற்கு காலமும் உழைப்பும் அர்ப்பணிக்க வேண்டியிருக்கின்றமை | தகவல் முறைமையை நிறுவுதல் |
| 6.3 | 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.4 | நிதி ஒழுங்குகள்134 (3) பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 அமைய, குறித்த ஆண்டில் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தியிருத்தியிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றிக்கையின் 7 ஆவது அத்தியாயத்துக்கு அமைய சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 8.2 | மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்துக்கு அமைய, குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல், ஒருங்கிணைத்தலுக்காக பொருத்தமான தொடர்பு | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலர் நியமிக்கப்பட்டு, குறித்த அலுவலர் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல். | | | |
| 8.3 | 01/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | இருப்பு கணக்கெடுப்பு சரியான வகையில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்க முடியாது போயுள்ளது. | தொடர்ந்து வரும் காலங்களில் இருப்புக் கணக்கெடுப்பு துரிதமாகப் நிறைவு செய்து குறித்த காலப்பகுதியில் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8.4 | வருடாந்த பொருள் இருப்பு கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதந்துரைகள் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | மிகை தொடர்பான குழு அறிக்கைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், குறைபாடுகள் பற்றிய விசாரணைக் குழு அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. | விசாரணைக் குழு அறிக்கை கிடைத்த பின்னர் விதந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை எடுத்தல். |
| 8.5 | நி.ஒ. 772 இற்கமைய சேதமடைந்த பொருட்கள் அகற்றப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்க முடியவில்லை. | தொடர்ந்து வரும் காலங்களில் பொருள் இருப்பு குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளல். |
| **9** | **வாகனங்கள் முகாமைத்துவம்** | | | |
| 9.1 | இயங்குநிலை வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் | இணங்கவில்லை | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | | | |
| 9.2 | வாகனம் சேதமடைந்து 06 மாத காலத்தினுள் அகற்றப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | சேதமடைந்த வாகனங்கள் வேறு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | - |
| 9.3 | வாகன லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்கவில்லை | - | - |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய செயற்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 9.5 | 2016.12.29 திகதிய 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனமடைதல் மீள் சோதனை செய்தல் | இணங்கவில்லை | - | - |
| 9.6 | குத்தகைக் காலப் பகுதியின் பின்னர், குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழுமையான உரிமை உரித்தளிக்கப்பட்டிருத்தல | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு, அவை கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகள் சீராக்கப்பட்டிருத்தல். | - | - | - |
| 10.3 | வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குகளுக்கமைய செயலாற்றி அந்நிலுவை ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **11** | **நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு அவற்றின் எல்லையைக் கடந்து செல்லாத வகையில் செலவிடப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 11.2 | நி.ஒ .94 (1) அமைய வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு எல்லையைக் கடக்காத வகையில் பொறுப்புகளுக்கு உடன்படுதல். | இணங்கவில்லை | நிதி ஒதுக்கீட்டை விஞ்சிய வாகனப் பராமரிப்பு வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றமை | - |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணங்குதல். | இணங்கவில்லை | திணைக்கள உத்தியோகத்தர்களின் இடமாற்றம், ஓய்வு பெறுதல் மற்றும் 2022.06.22 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 14.˙.2022 இன் பிரகாரம்2023 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்தம் அறவிட வேண்டிய கடன் தவணைக்கட்டணங்கள் அறவிடப்படாமையால் கிடைப்பனவு எல்லையை அடைய முடியாமல் போனமையால், திணைக்களத்தின் மூலம் 2024.11.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிதிப் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைத் திட்டம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுக்கு குறித்த எல்லையை திருத்தம் செய்வதற்காக கோரப்பட்டுள்ளது. | |
| 12.2 | நிலுவையாக உள்ள நிலுவைக் கடன் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.3 | ஒரு ஆண்டுக்கு கூடுதலான காலமாக இருக்கும் நிலுவை கடன் மீதிகள் சீராக்கல் செய்யப்பட்டிருத்தல் | இணங்கவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - |
| **13** | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 இற்கமைய செயற்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தக மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 14.2 | நி.ஒ 371 இற்கமைய விடுவிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி, குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | மீதித் தொகைகள் தாமதிக்காமல் மேற்கொண்டிருப்பினும், வவுச்சர்களில் காணப்படும் குறைபாடுகளால் இறுதி சீராக்கல்கள் தாமதமடைந்திருத்தல் | தொடர்ந்தது வரும் காலங்களில் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தி சரியான வகையில் வவுச்சர்களைச் சமர்ப்பித்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.3 | நி.ஒ 371 ற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில் இடைக்கால கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கு மீதி, திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 15.2 | சேகரிக்கப்பட வருமானம், வைப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 15.3 | நி.ஒ 176 ற்கு அமைய நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வரையறைக்குள் ஆளணி பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 16.2 | ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.3 | 2017.09.20 திகதிய 04/2017 இலக்க MSD சுற்றறிக்கைக்கு அமைய, அனைத்து அறிக்கைகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **17** | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுகள் / குறைகளைத் தெரிவிப்பதற்கான வசதி வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 17.3 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 08 மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கமைய ஆண்டில் இரு தடவை அல்லது ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| **18** | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2018 (1) இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றிக்கைக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்படுதல் மற்றும் அமுல்படுத்தப்படுதல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தால் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. | இணங்குகின்றது | - | - |
| **19** | **மனித வளத் திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய 02/2018 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 2 மாதிரியின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 19.2 | மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு ஆண்டில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்துக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியின் அடிப்படையில் அனைத்து ஆளணியினருக்குமான வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 19.4 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேட்ட அலுவலர் நியமிக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | - | - |
| 20 | கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல் | | | |
| 20.1 | கடந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | - | குறித்த கணக்காய்வுப் பந்திகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## ❖ முடிவு :

அரச கொள்கைகள், அரசின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துதல் இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்பு மற்றும் பணியாகும் என்பதுடன், மாறிவரும் உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு அமைவாக தகவல் தொழில்நுட்ப செயன்முறைகளை முகாமைத்துவம் செய்து, சுதந்திரமாகவும், பொறுப்புடனும் உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் பிரதான குறிக்கோள்களாகும்.
இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அதாவது, ஆரோக்கியமான ஊடக சமூகத்தை உருவாக்குவதற்கு தேவையான பின்னணியை இலங்கைச் சமூகத்தில் நிறுவுவதற்கு பயன்படுத்தப்படும் கொள்கைகளை தயாரித்தல், திணைக்களத்தின் ஆளணி நிர்வாகம், அமைச்சு மற்றும் ஏனைய அரச, தனியார்துறை நிறுவனங்களுடன் கடமை ரீதியான தொடர்புகளைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளுக்காக திணைக்களம் தனது ஆளணியை நெறிப்படுத்தும் அதேவேளை, அதன் அலுவலர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் சூழமைவு உருவாக்கி வழங்கப்படுகிறது.

இவற்றில் திணைக்களம் நிறுவுவப்பட்ட அடிப்படை குறிக்கோளை அடைவதற்காக கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது. திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் குறிக்கோளை அடைவதற்காக செயற்படுகின்றது.

அரசின் அபிவிருத்தி செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகிபாகத்தை நிறைவேற்றி அந்த குறிக்கோளை அடைவதற்காக செயற்படும் அரசாங்க தகவல் திணைக்களம் அதற்காக பல்வேறு செயற்பாடுகளை தமது திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் ஆரம்பத்தில் குறித்த திட்டத்துக்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுகிறது.

பின்னர் ஆண்டு முழுவதும் குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அதன் மூலம் அடைய முயற்சிக்கும் குறிக்கோளை அடிப்படையில் பின்வரும் வகையில் நிரற்படுத்தலாம்.

- தரநியமமான ஊடக மரபை உருவாக்குதல்.
- தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரசின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு செல்லுதல்.
- ஊடகப் புலனாய்வுச் செயன்முறையை பலப்படுத்தல்.
- நல்லாட்சி, நல்லிணக்கம், பேண்தகு அபிவிருத்தியை நிலைநாட்டி கருத்து வெளிப்படுத்தல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்தல்.
- ஊடகத் துறைக்குரிய ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் திட்டமிடலை உருவாக்குதல்.

மேற்குறித்த குறிக்கோளை அடைவதற்காக திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ஏனைய அமைச்சுக்களால் நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் (ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடக செயலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்)
- ஊடகக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல். (அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் பணிகள் தொடர்பான)
- ஊடக அறிவித்தல்களை வெளியிடுதல்
- ஊடகக் கண்காணிப்பு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கட்டுரைகள் வெளியீடுகளை வெளியிடுதல்.
- புதிய ஊடகங்களை பாவித்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரச்சாரத்தை வழங்குதல். (Face Book, You Tube, X (Twitter) etc….)
- உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்.
- நாளாந்த புலனாய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் தேவைக்கு அமைய பொருத்தமான பிரிவுகளை தெளிவுபடுத்துதல்
- சமகால ரீதியில் முக்கியத்துவம் மிக்க தலைப்புகள் மற்றும் ஊடகத் துறையின் புதிய போக்குகள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.
- விவரணத் திரைப்படங்களை தயாரித்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல்
- தேசிய விழாக்கள் மற்றும் பேணி பாதுகாக்க வேண்டிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த நிகழ்வுகளை நிழற்படம் எடுத்தல், பேணிப் பாதுகாத்தல்.

நாட்டில் அதிகரித்து வரும் உணவு மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்ற மக்களை முற்கூட்டிய ஆயத்தம் செய்வதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு வேலைத்திட்டம் பற்றிய திரைப்படங்கள்/குறுங்காணொளி/விளம்பரங்களைத் தயாரித்து மக்களைத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திலான முக்கிய வைபவங்கள் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்துவதற்கான விளம்பரங்கள், விவரண திரைப்படங்கள் மற்றும் பிரச்சார ஒளிநாடாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. (உதாரணம் - 76 ஆவது தேசிய சுதந்திரதின வைபவம் தொடர்பான தொலைக்காட்சி விளம்பர நாடா, நூற்றாண்டுக்கான படிமுறை எனும் விவரணத்திரைப்படம்). இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள வேளையில் அயல்நாடுகள் மற்றும் நட்பு நாடுகளிலிருந்து கிடைத்த உதவிகள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றிய விவரணத் திரைப்படத்தின் மூலம் பொதுமக்கள் தெளிவுபடுத்தப்பட்டனர். நெருக்கடிக்குள்ளாகியிருந்த சுற்றுலாத்துறையை மீண்டும் மேம்படுத்துவதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு இணையாக குறுங்காணொளி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐஆகு கடன் சலுகை கிடைக்கின்றமையும், அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது இலங்கை ரூபாய் பலம்பொருந்தியமை பற்றிய குறுகிய விவரண நிழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளது.

******

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information